மாலை : 49 மணி : 9 செப்டம்பர் 2007 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



## அருள்மிகு ஈச்சனாரி விநாயகர்



# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்


திருவல்லிக்கேணி, சென்னை - 5.

Phone : 28442462, 28442449

Website : www.sriparthasarathyswamytemple.org E-mail : sriparthasarathyswamytemple@gmail.com


## புரட்டாசி சனி வாரம், நவராத்திரி உற்சவம்

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புரமெரிசெய்த சிவனுறுதுயர்களை தேவை
பற்றலர்வீயக் கோல்கையில்கொண்டு பார்த்தன் தன் தேர் முன்நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணி கண்டேனே.

- திருமங்கையாழ்வார்.

வைணவத் திருத்தலங்களில் சிறப்பாக விளங்குகின்ற திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலில் ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், அஹோபிலம், அயோத்தி ஆகிய ஐந்து திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் இங்கு ஒரே திருக்கோயிலில் ஐந்து தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர். அருள்மிகு பார்த்தசாரதி, அருள்மிகு நரசிம்மஸ்வாமி, அருள்மிகு ரங்கநாதர், அருள்மிகு சக்ரவர்த்தித் திருமகன், அருள்மிகு கஜேந்திர வரதர், ஆகிய எம்பெருமான்களுக்கு ஆண்டு முழுவதும் பல்வேறு உற்சவங்கள் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. புரட்டாசி மாதம் முழுவதும் திருப்பதி வேங்கடவனுக்கு முக்கியமான மாதமாகும். வேங்கடவனே இங்கு வேங்கடகிருஷ்ணனாக சேவை சாதிப்பதால் இங்கு புரட்டாசி மாதம் சிறப்பான மாதமாகும். இந்த புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகள் வெகு சிறப்பான நாட்களாகும். இந்த நாட்களில் கீழ்க்கண்ட விவரப்படி திருக்கோயில் திறக்கப்பட்டு தரிசனம் நடைபெறுகிறது.

| | | |
|---|---|---|
| புரட்டாசி சனி 1ம் வாரம் | 22.09.2007 | காலை 4.00 மணிக்கு விஸ்வரூபம்<br>காலை 6.00 மணி முதல்<br>மதியம் 1.00 மணி வரை<br>மாலை 3.00 முதல் இரவு 10.30 வரை<br><br>சிறப்பு நுழைவுக்கட்டணம் ரூ. 100/-<br>கட்டணம் ரூ. 10/-<br>பொது தரிசனம் உண்டு |
| புரட்டாசி சனி 2ம் வாரம் | 29.09.2007 | |
| புரட்டாசி சனி 3ம் வாரம் | 06.10.2007 | |
| புரட்டாசி சனி 4ம் வாரம் | 13.10.2007 | |
| புரட்டாசி சனி 5ம் வாரம் | 20.10.2007 | |

### நவராத்திரி திருவிழாவில் ஸ்ரீ வேதவல்லித் தாயாருக்கு லட்சார்ச்சனை

| | | |
|---|---|---|
| நவராத்திரி | 12.10.2007<br>முதல்<br>20.10.2007<br>முடிய | அருள்மிகு வேதவல்லித்தாயார்<br>லட்சார்ச்சனை நடைபெறும்.<br>மாலை 4.00 மணி முதல் 6,00 மணி வரை<br>சனிக்கிழமை மட்டும் இரவு 8.00 மணிக்கு<br>லட்சார்ச்சனை கட்டணம் ரூ. 100/- |

சேவார்த்திப் பெருமக்கள் அனைவரும் தவறாது இப்பெருவிழாவில் கலந்து கொண்டு, அருள்மிகு ருக்மணி சமேத பார்த்தசாரதி சுவாமியின் திருவருள் மற்றும் ஸ்ரீ வேதவல்லித் தாயாரின் திருவருளையும் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**பொ. ஜெயராமன்,**

துணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு | ஆண்டு 2038 மணி 9 | ஸர்வஜித்-புரட்டாசி செப்டம்பர் 2007

## அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

**“வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு”**

- ஔவையார்

விநாயகர், பிள்ளையார், கணபதி, ஐங்கரன், ஆனைமுகன், விக்கினேசுவரன் எனப் பல்வேறு தெய்வத் திருநாமங்களாலும், ஞானத் தோற்றத்தாலும், கண்ணிலும், கருத்திலும் கொள்ளத்தகும் மூல முழு முதற்கடவுளான விநாயகப் பெருமானின், ஆவணித் திங்களில் வரும் சதுர்த்திப் பெருவிழாவினை சிறப்புடன் கொண்டாடி வழிபட்டு, இன்னல்கள் தீர்ந்து எல்லா நன்மைகளும் பெறுவோமாக.

செம்மொழியாம் தமிழ்மொழியின் இலக்கிய வளம் தோன்றுவதற்கு அடிப்படையாகத் திகழ்பவைகளில் சமயமும் ஒன்று என்றும், தமிழகத்தில் தோன்றிய பெரும்பாலான சமய இலக்கியங்கள் சைவ சமயத்தைச் சார்ந்தே படைக்கப்பட்டுள்ளன என்பதையும் ஆய்வு செய்து “சைவமும் தமிழும்” எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் முனைவர் செந்தமிழ்வாரிதி செல்வக்கணபதி அவர்கள். பல அரிய செய்திகளை அள்ளி வழங்கும் அற்புதத் தொடராக அடுத்தடுத்து வரும் இதழ்களிலும் இது தொடர் கட்டுரையாக வெளிவர உள்ளது.

தேரழுந்தூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஆமருவியப்பனின் திருஅவதாரங்களை கண்டு மகிழும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பாசுரங்களை பாச்சுடர். வளவ. துரையன் அவர்களும், திருவரங்கப்பெருமான் திருத்தலத்தில் நடைபெறும் “பவித்ரோத்சவ” சிறப்புகளை திருவரங்கம் இந்திராஆரவமுதன் அவர்களும் இவ்விதழில் வழங்கியுள்ளனர்.

மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தேன் பக்தியின் உச்சக்கட்டம், அன்பு மேலீடு என்றும், இறைவன் துதிப்பதற்காக மட்டுமல்ல துய்ப்பதற்கும்தான் என்றும், சிவப்பரம்பொருளை துதித்துத் துய்ப்பதில் மணிவாசகப் பெருமானை மிஞ்சக் கூடியவர் வேறு எவரும் இல்லை என திருவாசகத்தின் சிறப்பினையும், மணிவாசகப் பெருமானின் பெருமையையும் சிந்தித்து எளிய நடையில் நமக்குத் தந்துள்ளார், சித்தாந்த இரத்தினம் டாக்டர் எம்.ஆர். சந்தானம் அவர்கள்.

அட்டவீரட்டத்தலங்களுள் தலையாயதும், சமண மதம் சார்ந்த தருமசேனர் திருநாவுக்கரசர் ஆன சிறப்புபெற்றதுமான திருவதிகைத் தலத்தின் எழிலார்ந்த கோபுரம் தஞ்சை கோபுரத்தின் தந்தை கோபுரமாக திகழ்ந்ததையும், திருத்தலச் சிறப்பினையும் தொகுத்து வழங்கியுள்ளார் பனையபுரம் அதியமான் அவர்கள்.

மெய்ப்பொருளைக் காணும் மெய்யுணர்வைப் பெறுவதற்கு, மனமும் அறிவும் செம்மையாக இருக்க வேண்டும் என்றும், அம்மனமும், அறிவும் செம்மையாக இருப்பதற்கான வழிவகைகளை தனக்கே உரிய நடையில் வழங்கியுள்ளார் பேராசிரியர் அரங்க இராமலிங்கம் அவர்கள்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நினைவலைகளாகக் கந்தபுராண நுண்பொருள் தொடரும், டாக்டர் சரஸ்வதி இராமநாதன் அவர்களின் கந்தரனுபூதித் தொடரும் இவ்விதழில் வெளிவந்துள்ளன.


வகுளகிரி ஸ்ரீவெங்கடாஜலபதிப் பெருமானின் சிறப்புகளும், சிவன்மலையில் வீற்றிருக்கும் அருள்மிகு சுப்ரமணியசுவாமியின் சிறப்புகளும், நாளும் நலம் தரும் நாமக்கல் நரசிம்ம சுவாமியின் சிறப்புகளும் அழகிய வண்ணப்படங்களுடன் திருத்தல உலாவாக இவ்விதழில் வெளிவந்துள்ளன. அனைவரும் இதழினைப் படித்து பயன்பெறுவோமாக.

அன்புள்ள

(த.பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை.
சென்னை - 600 034.

# தவிர்க்க வேண்டிய நான்கு



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

"தாத்தா! அதோ - தள்ளாடி நடந்து போகிறாரே: அவர் யார்? ஆளைப் பார்த்தால் கட்டுடல் வாய்ந்தவராகக் காணப்படுகிறார்! ஆனால் நடையில் ஏன் இந்தத் தளர்ச்சி?" என்று பேரன் கேட்டான்.

"அவரா? ஆள் வலுவானவர் மட்டுமல்ல: அறிவு நூல்களைக் கூடக் கற்றவர்! ஆயினும் அவர் தடுமாற்றத்தோடு நடப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தூக்க முடியாத சுமையைத் தூக்கிக் கொண்டு செல்கிறார். அதனால்தான் தள்ளாடிடும் நிலை" என்று பேரனுக்கு அந்த முதியவர் பதில் அளித்தார்.

இளைஞனல்லவா? அத்துடன் அவனுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. "என்ன தாத்தா! அந்த மனிதர் தலையில் எந்தச் சுமையையும் காணவில்லையே! நீங்கள் அவர் பளுவைத் தூக்க முடியாமல் திண்டாடுவதாகக் கூறுகிறீர்களே!" என்று கிழவரை மடக்கினான்.

"தளிர்ப்பருவம் உனக்கு! அதனால் அந்த மனிதர் தடம் மாறி நடப்பது உனக்குத் தெரியவில்லை. அற வழியிருக்க அதனை விடுத்துப் பிற வழியில் அவர் செல்வது ஏன் என்று எனக்குத் தெரியும். அவர் சுமந்திருக்கிற மூட்டைகளின் அழுத்தத்தால் அவர் கால்கள் பின்னுகின்றன. எனவே அறவழியை விடுத்து எங்கு செல்கிறோம் என்று தெரியாமல் கால்கள் போகும் வழி போய்க் கொண்டிருக்கிறார்".

"கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் தாத்தா! என்ன மூட்டை? என்ன சுமை? ஏன் அவற்றை அவர் வீணாகச் சுமக்கிறார்? அந்தச் சுமை எதுவும் என் கண்ணுக்குத் தெரியவில்லையே!"

"கண்ணுக்குத் தெரியாது! ஆனால் அறிவுக்குப் புலப்படும் அந்தப் பெருஞ்சுமை! சொல்லுகிறேன் கேள்! ஒரு பொருளின்மீது மனிதன் விருப்பம் கொள்வது - அல்லது ஆசைப்படுவது இயல்பு! ஆனால் அதை அடைவதற்காக எத்தகைய குறுக்கு வழிக்கும் ஒருவன் தயாராகிக் கொள்கிறான் என்றால், அந்த ஆசை அவனை மனித சமுதாயத்தின் மதிப்பை இழக்கச் செய்து அவன் தலையில் பெரும் சுமையாக ஏறி உட்கார்ந்து கொள்கிறது. அப்படிப்பட்ட ஆசையை இதோ அந்த மனிதர் சுமந்துகொண்டு நடக்கிறார். தன்னுடைய தனிப்பட்ட ஆசாபாசங்களுக்காகத் தன்மானத்தையும் இழக்கத் தயாராகி விட்டாரே என்று விபரமறிந்தோர் வியந்தனர். அவர்களைக் கண்டு அவர் கொண்ட சினம் மலை போல் உருவெடுத்தது! அந்தச் சினமெனும் பெரும் சுமையையும் தூக்கிக்கொண்டு நடக்கிறார். எப்படியிருந்த மனிதர் இப்படி ஆகிவிட்டாரே என்று அவருக்காக இரக்கப்பட்டவர்கள் மீது கடுஞ்சொற்களை வாரியிறைத்தார். அந்தக் கடுஞ்சொற்கள்: யானையானது தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டது போல். அவர் தலைக்கே மற்றுமொரு சுமையாக வந்து சேர்ந்தது! இத்தனை சுமையுடன் அவரால் எப்படி அறவழியில் பயணம் செய்திட முடியும்? அதனால் தான் பாதை தவறிப் பரிதவிக்கிறார்."

"தாத்தா! தாத்தா! அய்யோ - அந்த மனிதர் ஆற்றில் விழுந்துவிட்டார்! விழுந்தவர் நீந்திடக்கூட முடியாமல் தவிக்கிறார். அதோ பாருங்கள் தாத்தா அவர் ஆற்றில் முழுகிக் கொண்டேயிருக்கிறார். ஆமாம்! ஆளையே காணவில்லை! ஆற்றோடு போய்விட்டார் தாத்தா!"

"அவர் விழுந்துவிட்ட ஆறு என்ன ஆறு தெரியுமா? அதுதானப்பா அழுக்காறு! அதில் விழுந்த யாரும் தப்பமுடியாது! எந்த ஆற்றில் விழுந்தாலும் ஒருவேளை தப்பிவிடலாம். இந்த அழுக்காறு இருக்கிறதே: இதில் விழுந்து பிழைத்தோர் யாரும் இல்லை."

"தாத்தா! அழுக்காறு என்றால் என்ன?"

அதுதானப்பா அடுத்தவன் வாழ்வதைப் பார்த்து - அடுத்தவன் புகழப்படுவதைப் பார்த்து - அடுத்தவன் அறிவாற்றல், வீரம், உறுதி, இவற்றைப் பார்த்து - பொறாமை கொள்ளுதல்! அதற்குப் பெயர்தான் அழுக்காறு! அதனால்தான் வள்ளுவர் பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு சுமைகளையும் சுமக்காமல் நடந்தால் அறவழியில் எளிதாகச் செல்லலாம் என்று கூறியிருக்கிறார்."

தாத்தாவின் விளக்கம் கேட்டுப் பேரனின் விழிகள் ஒளி சிந்தின.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

அதிகாரம் : 4 அறன்வலியுறுத்தல் பாடல் : 35

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்
குறளோவியம் நூலிலிருந்து

நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.



சென்னை, நுங்கம்பாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் 15-08-2007 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் பங்கேற்றோரும்.

## இதழின் உள்ளே


1. அருள்மிகு விநாயகர் போற்றிகள் - 4
2. சைவமும் தமிழும் செந்தமிழ் வாரிதி செல்வக்கணபதி - 6
3. திருஅழுந்தூரில் அவதாரங்கள் பாச்சுடர் வளவ துரையன் எம்.ஏ., - 9
4. மாணிக்கவாசகரின் பெருமையும் திருவாசகத்தின் சிறப்பும் சித்தாந்த இரத்தினம் டாக்டர். எம்.ஆர். சந்தானம் - 11
5. வகுளகிரி வேங்கடாஜலபதி திருக்கோயில் சுந்தரராஜ பட்டாச்சாரியார் - 15
6. சிவன்மலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் - 17
7. ரெட்டியார்சத்திரம் அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில் - 21
8. சேலம் அருள்மிகு பஞ்சாட்சர கணபதி - 23
9. தஞ்சை கோபுரத்தின் தந்தை கோபுரம் பனையபுரம் அதியமான் - 25
10. பவித்ரோத்ஸவம் இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம் - 27
11. மனமும் அறிவும் பேராசிரியர் அரங்க இராமலிங்கம் - 29
12. பதினோராம் திருமுறையின் பக்திப் பனுவல்கள் தமிழாகரர் தெ. முருகசாமி - 31
13. வேலும் மயிலும் துணை டாக்டர். சரஸ்வதி இராமநாதன் - 33
14. கந்தபுராண நுண்பொருள் - திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் நினைவலைகள் - 35
15. நாளும் நலம் தரும் நாமக்கல் நரசிம்மர் கே.எஸ். இளங்கோவன், நாமக்கல் - 37

# அருள்மிகு விநாயகர்

## 108 போற்றிகள்



"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

- ஔவையார்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அங்குசச் சுரத்தாய் போற்றி
3. ஓம் அடியார்க் கெளியாய் போற்றி
4. ஓம் அமரர்கள் நாதா போற்றி
5. ஓம் அறக் கருணையாய் போற்றி
6. ஓம் அறிவானந்த உருவே போற்றி
7. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
8. ஓம் ஆதார கணபதி போற்றி
9. ஓம் ஆரண முதலே போற்றி
10. ஓம் ஆனை முகத்தனே போற்றி
11. ஓம் இடர்தனைக் களைவாய் போற்றி
12. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி
13. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
14. ஓம் இமயச் செல்வியின் சேயே போற்றி
15. ஓம் இளம்பிறை போலும் எயிற்றினாய் போற்றி
16. ஓம் ஈசனார் மகனே போற்றி
17. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
18. ஓம் உத்தமி புதல்வா போற்றி

19. ஓம் உயிரினுக்குயிரே போற்றி
20. ஓம் உய்வருள் பெருமைய போற்றி
21. ஓம் உலகெலாம் ஆனாய் போற்றி
22. ஓம் உலவாத இன்பமே போற்றி
23. ஓம் உலைவிலாக் களிறே போற்றி
24. ஓம் உள்ளமுயர்த்துவாய் போற்றி
25. ஓம் உள்ளத்தறியில் உள்ளாய் போற்றி
26. ஓம் உள்நிறை ஒளியே போற்றி
27. ஓம் எண்டோளன் செல்வா போற்றி
28. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி
29. ஓம் எழில்வளர் சோதி போற்றி
30. ஓம் என்னுயிர்க் கமுதே போற்றி
31. ஓம் ஏழைக்கிரங்குவாய் போற்றி
32. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
33. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி
34. ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
35. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
36. ஓம் கங்கை வேணியா போற்றி
37. ஓம் கணநாத கற்பகா போற்றி
38. ஓம் கணபதிக் களிறே போற்றி
39. ஓம் கயமுகற் கடிந்தோய் போற்றி
40. ஓம் கருவிலும் காப்பாய் போற்றி
41. ஓம் கற்றோர் கருத்தே போற்றி
42. ஓம் கற்பக விநாயகா போற்றி
43. ஓம் காங்கேயன் தமையா போற்றி
44. ஓம் காலங்கடந்தோய் போற்றி
45. ஓம் காவிரிதரு சீரோய் போற்றி
46. ஓம் கிளரொளி வடிவே போற்றி
47. ஓம் குஞ்சரக் குரிசில் போற்றி
48. ஓம் கூவிள மாலையாய் போற்றி
49. ஓம் கைப்போதகமே போற்றி
50. ஓம் சக்கரந் தரித்தோய் போற்றி
51. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
52. ஓம் சந்திர சேகரா போற்றி
53. ஓம் சித்தத் தேனே போற்றி
54. ஓம் சித்தி விநாயகா போற்றி
55. ஓம் சித்தி புத்தி மணாளா போற்றி
56. ஓம் சிவகணபதியே போற்றி
57. ஓம் சீர்பெற அருள்வோய் போற்றி
58. ஓம் செல்வக் கணேசா போற்றி
59. ஓம் செல்வமருள்வோய் போற்றி
60. ஓம் செல்வ நீறு தருவாய் போற்றி
61. ஓம் சேமம் தருவோய் போற்றி
62. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி
63. ஓம் தத்துவ முதலே போற்றி
64. ஓம் தத்துவப் பேறுதருவாய் போற்றி
65. ஓம் தந்தி முகனே போற்றி
66. ஓம் தந்தையாக் காப்பாய் போற்றி
67. ஓம் தழைத்திட வருவாய் போற்றி
68. ஓம் தற்பர விநாயகா போற்றி
69. ஓம் தாரக மறையே போற்றி
70. ஓம் துப்பார் மேனியனே போற்றி
71. ஓம் தொண்டர்தம் துணையே போற்றி
72. ஓம் நச்சினார்க்கினியோய் போற்றி
73. ஓம் நந்திமகனே போற்றி
74. ஓம் நாத முடிவே போற்றி
75. ஓம் நாவமர் பாட்டே போற்றி
76. ஓம் நான்ற வாயினை போற்றி
77. ஓம் நிறைவாழ்வருள்வாய் போற்றி
78. ஓம் நாற்பொருள் அளிப்பாய் போற்றி
79. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி
80. ஓம் பகையினைக் களைவாய் போற்றி
81. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி
82. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி
83. ஓம் பரம தயாளா போற்றி
84. ஓம் பரிதிபோல் மதி தருவாய் போற்றி
85. ஓம் பாதிமதி சூடிபோற்றி
86. ஓம் பிணிகள் களைவாய் போற்றி
87. ஓம் பிரணவக் களிறே போற்றி
88. ஓம் பிள்ளைகள் தலைவா போற்றி
89. ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
90. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி
91. ஓம் பையர வசைத்தாய் போற்றி
92. ஓம் போக நாயகா போற்றி
93. ஓம் போத வடிவே போற்றி
94. ஓம் மணிநீல கண்டா போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாசிலா மணியே போற்றி
97. ஓம் முக்கட் கரும்பே போற்றி
98. ஓம் முடியா முதலே போற்றி
99. ஓம் முத்தமிழ் முதல்வா போற்றி
100. ஓம் மெய்ப்பொருள் நீயே போற்றி.
101. ஓம் மோதகக் கையினாய் போற்றி
102. ஓம் யாவு மானாய் போற்றி
103. ஓம் யோகியர் தலைவா போற்றி
104. ஓம் வல்லமை வல்லவா போற்றி
105. ஓம் விகடசக்கர விநாயகா போற்றி
106. ஓம் விண்மழை தருவாய் போற்றி
107. ஓம் வெற்றித் திருவே போற்றி
108. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி

நிறைவாக, அந்தந்த திருத்தலத்திற்குரிய விநாயகர் பாடலை ஓதி, போற்றியை நிறைவு செய்யலாம்.

# சைவமும் தமிழும்

செந்தமிழ் வாரிதி. **செல்வக்கணபதி**



தமிழ், இலக்கிய வளம் நிறைந்த மொழி, இலக்கியம் தோன்றுவதற்குப் பல அடிப்படைகள் உள்ளன. அவற்றுள் சமயமும் ஒன்று. தமிழில் சமயம் சார்ந்தே இலக்கியங்கள் பலவும் எழுந்துள்ளன. தமிழ்நாட்டில் பல சமயங்கள் நிலவி வருகின்றன என்றாலும், பெரும்பாலான இலக்கியங்கள் சைவ சமயத்தைச் சார்ந்தே படைக்கப்பட்டுள்ளன.

ஒரு மொழிக்கு இலக்கியம் இலக்கணம் என இரு கூறுகள் உண்டு. அதுபோல் சமயம் சார்ந்த நூல்களிலும் தோத்திரம், சாத்திரம் என இரு பகுப்புகள் உள்ளன.

சைவ சமயக் கடவுளர்கள் மேல் பாடப்பெற்ற வழிபாட்டுப் பாடல்களைத் தோத்திரம் என்று கூறுவது வழக்கம். வழிபாட்டுப் பாடல்களின் தொகுப்புக்களையே சைவத் தமிழ் இலக்கியங்கள் என்று வகுத்துள்ளனர். பிற்காலத்தில் சைவ சமயம் சார்ந்து வாழ்ந்த அடியார்கள் மீதும் பாடல்கள் பாடப்பட்டன.

சைவத்தமிழ் இலக்கியங்களைப் பலவகையாகப் பகுத்துள்ளனர். திருமுறைகள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் முதலியன குறிப்பிடத்தக்கன.

சைவம் என்பது சிவனை வழிபடும் நெறி. முருக வழிபாடு, கொற்றவை வழிபாடு, விநாயகர் வழிபாடு முதலியன ஒரு காலத்தில் தனித்தனியே நிகழ்ந்துள்ளன. காலப்போக்கில் கடவுளர்களுக்கு இடையே உறவுமுறை கற்பிக்கப்பட்டன. சிவன் துணைவியாக உமையும். பிள்ளைகளாக முருகன், விநாயகர் இருவரும் கொள்ளப்பட்டனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கி சிவன், உமை, முருகன், விநாயகர் வழிபாடுகள் ஒன்றாய் கலந்தன.

சைவத்தமிழ் இலக்கியங்கள், தமிழ் மொழியில் புதிய இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு உதவின. தமிழ் யாப்பியல் வளர்ச்சியில் இவை பெரும்பங்காற்றியுள்ளன. தமிழ் இசை வளர்ச்சிக்கும் இவ்விலக்கியங்கள் துணை நின்றன. தமிழ்நாட்டின் இரண்டாயிரம் ஆண்டுக்கால சமய வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பை இவை வழங்கின.

சைவத்தமிழ் இலக்கியங்கள் நிறைவாக உள்ளன. அவை எல்லாவற்றையும் பற்றி இங்கே விளக்கம் தரப்படவில்லை.

**பழந்தமிழ் நூல்களில் சைவம்**

பழந்தமிழ் நூல்களில் சைவ சமயக் குறிப்புகள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. இக்காலப் பகுதியில் அகம், புறம் பற்றியே பாடல்கள் எழுந்தன. திருமுருகாற்றுப்படையைத் தவிர குறிப்பிடத்தக்க சமய நூல் இக்காலப் பகுதியில் தோன்றவில்லை. தொல்காப்பியத்தில், ஒரு சில கடவுளரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பிற்காலச் சைவ சமய இலக்கியங்களில், சைவ சமயக் கடவுளர் குறித்து வரும் செய்திகளோடு பொருந்தி வரும் சில அரிய தொடர்கள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கொற்றவை, முருகன் குறித்த இசைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பிற்காலத்தில் சைவ சமய இலக்கியங்கள் பல தோன்றுவதற்குப் பழந்தமிழ் நூல்கள் துணை செய்தன.

**சைவ சமயம் – விளக்கம்**

இந்திய நாட்டுச் சமயங்கள் பலவற்றுக்கும் மூல நூல்கள் வேதங்கள் ஆகும். வேதங்களை ஏற்றுக் கொண்ட சமயங்கள், வைதிக சமயங்கள் எனப்பட்டன. அவற்றுள் தலையாய சிறப்புடையன சைவமும், வைணவமும் ஆகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு தோன்றிய சமயம் சைவம். இது காலப் பழமைமிக்கது. வேதங்களோடு, சிவ ஆகமங்களும் சைவத்தின் முதல் நூல்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. வேத ஆகமங்களை இறைவன் நூல் என்று முன்னோர் குறித்துள்ளனர்.


**சைவ மரபுகள்**

சைவ சமயத்தில், மூன்று பொருள்கள்

முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன. அவை முறையே இறை, உயிர், தளை என்பன. சாத்திர நூலாசிரியர்கள் இவற்றை வடமொழியில் பதி, பசு, பாசம் எனக் குறித்துள்ளனர். சிவ வழிபாடு மூன்று நிலைகளைக் கொண்டது. அவை உருவமற்றநிலை. உருவ நிலை, இரண்டும் கலந்த நிலை என்பன. இவற்றை முறையே அருவம், உருவம், அருவுருவம் என்பர் சாத்திர நூலாசிரியர். சிவலிங்க வழிபாடு அருவுருவ நிலையே என்று கூறப்படுகிறது. சைவத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூன்று சிறப்பு நிலைகள் பேசப்பட்டுள்ளன. இறைவன் சிறப்புற்றிருக்கும் நிலை மூர்த்தி வழிபாடு எனப்படும். நீர் நிலை சிறப்புற்றிருக்கும் இடங்களில் நீராடி வழிபடுவது தீர்த்த வழிபாடு என்று பேசப்படும். இறைவன் எழுந்தருளி இருக்கும் ஊர் சிறந்திருக்கும் நிலையில் அங்கே சென்று வழிபடுவது தல வழிபாடு என்று கூறப்படும்.


**சிவன் அடையாளங்கள்**

சிவபெருமான் கொண்ட திருமேனி வடிவங்களைச் சிவமூர்த்தங்கள் என இருபத்து ஐந்தாகக் குறிப்பர். சிவன் நிகழ்த்திய வீரச் செயல்கள் எட்டு என்பர். இத்தகு வீரம் நிகழ்த்திய தலங்கள் அட்டவீரட்டத் தலங்கள் எனப்படும். சிவபெருமானின் வடிவத் திருமேனி பற்றி ஆகமங்களும் வேதமந்திரங்களும் பல குறிப்புகளைத் தருகின்றன. அவன் சடாமுடி உடையவன். அதன் மீது பாம்பு, பிறைச்சந்திரன், கங்கை நதி மூன்றும் நிலைபெற்றுள்ளன. அவன் மூன்று கண்களை உடையவன். அவன் கழுத்து நீலநிறம் உடையது. அவன் எட்டு தோள்களை உடையவன். இடப்பாகத்தில் உமையைக் கொண்டுள்ளான். பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டவன். புலித்தோல் ஆடை உடையவன். கையில் சூலாயுதம் தாங்கியவன். கொன்றை மலர் அவனுக்கு விருப்பமானது. சுடுகாட்டுச் சாம்பலை அவன் உடலெங்கும் பூசி மகிழ்பவன், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் அவனே முதல்வன், பூதகணங்களைப் படையாகக் கொண்டவன், மேற்குறித்த செய்திகள் யாவும் சைவத் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டப்பெற்றுள்ளன.



**சைவம் – வாழ்வியல்**

சைவ சமயத்தைப் பின்பற்றி வாழ்பவர்களுக்குச் சில கடமைகளைச் சைவ நூல்கள் வரையறுத்துள்ளன. இறைவனுக்கு மலர் தூவி வழிபடுதல், இது சமயம் சார்ந்த சடங்கைக் குறித்து நிற்கிறது. இரண்டாவது, சிற்றுயிர்களிடம் கருணை கொண்டு வாழ்வது. இதனை உயிர் இரக்கம் என்பர். பிற்காலத்தார் வடமொழியில் இதனையே ஜீவகாருண்யம் என்றனர்.



மூன்றாவது, அடுத்த மனிதன் பசித்திருக்கும்போது அவனை உண்பித்து அறந்தலை நிற்பது. நான்காவதாகப் பேதம் இல்லாது எல்லோரிடமும் இன்சொல்பேசி, பண்பாடு காத்து வாழ்வது, இவற்றை முறையே, வழிபாடு, உயிர் இரக்கம், மனிதநேயம், பண்பாடு என்று கொள்ளுதல் பொருத்தமாகும். இவற்றை உள்ளடக்கி நிற்கும் அரிய பாடல் ஒன்று திருமூலரின் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

**"யாவர்க்கும் ஆம் இறைவர்க்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தாமே"**

இவ்வழகிய பாடல், சமயம் என்பது சடங்குகளைக் கடந்த, வேறு உயரிய வாழ்க்கை முறைகளையும் கற்பிக்கும் பெருநெறி என்பதை அறிவித்து நிற்கிறது.

**சைவத்தின் உட்பிரிவுகள்**

சிவனை வழிபடும் நெறி சைவம் என்பது முன்னரே கூறப்பட்டது. சங்ககாலத்தில் தமிழ் மக்கள் சிவன், உமை, கொற்றவை, முருகன், திருமால், இந்திரன், வருணன் முதலிய கடவுள்களை வழிபட்டு வந்துள்ளனர். விநாயகர் வழிபாடு அக்காலத்தில் இருந்திருக்க வில்லை. சூரியனை வழிபடும் வழக்கமும் நிலவியிருந்தது. ஆதிசங்கரார் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் மேற்குறித்த வழிபாட்டு நெறிகளை எல்லாம் தொகுத்து அறுவகைச் சமயங்களை முன்நிறுத்தினார். அவை சிவனை வழிபடும் சைவம், திருமாலை வழிபடும் வைணவம், சக்தியை வழிபடும் சாக்தம், சூரியனை வழிபடும் சௌரம், முருகனை வழிபடும் கௌமாரம், கணபதியை வழிபடும் காணாபத்தியம் என்பன. இவற்றுள் சூரிய வழிபாடு தமிழகத்தில் தனிநெறியாக வளரவில்லை. எனவே இந்நெறி குறித்த இலக்கியங்களும் தமிழில் உருவாகவில்லை. வைணவம் தனி நெறியாக இலக்கிய வளத்துடன் சிறந்துள்ளது.

**சைவக் கடவுளர்கள்**

சௌரம், வைணவம் என்ற இரண்டையும் தவிர்த்து ஏனைய நான்கு நெறிகளும், பிற்காலத்தில் ஒன்றாக இணைந்து சைவநெறியாகவே போற்றப்பட்டன. உமை சிவனின் துணைவியாகவும், முருகன் மகனாகவும், விநாயகர் மூத்த பிள்ளையாகவும் உறவுமுறை கற்பிக்கப்பட்டனர். சிவனின் அருளைச் சக்தியாகவும், ஆற்றலை முருகனாகவும், விரைந்து அருளும் திறத்தை விநாயகனாகவும் முன்னோர் உருவகித்து உரைத்தனர். இந்நான்கு கடவுளர்கள் மீதும் தனித்தனி இலக்கியங்களும் தனிப்பாடல்களும் தோன்றின. ஒருவரோடு ஒருவருக்கு உறவுமுறை கற்பித்தும் இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. ஆயினும், சைவமும் தமிழும் என்ற தலைப்பில் இந்நான்கு தெய்வங்கள் குறித்து எழுந்த இலக்கியங்கள் பலவும் ஒன்றாகவே கருதப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.


**தொல்காப்பியத்தில் சைவம்**

இடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் கி.மு. 700க்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. மூன்றாவதாகிய பொருளதிகாரத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களுக்கு உரிய கடவுளரைக் குறித்த நூற்பா ஒன்று உள்ளது.

- தொடரும்

# திருஅழுந்தூரில் அவதாரங்கள்

பாச்சுடர் வளவ. துரையன் எம்.ஏ.,



தேரழுந்தூர் என்ற பெயரில் இன்று மருவி வழங்கும் திரு அழுந்தூர், எம்பெருமான் 'ஆமருவியப்பன்' எனும் பெயரில் எழுந்தருளி இருக்கும் திவ்யதேசமாகும். இங்கே அருள் பாலிக்கும் தாயாரின் திருநாமம் செங்கமலவல்லி என்பதாகும்.

தாயாரின் திருநாமத்தைச் சொல்லியே திருமங்கை ஆழ்வார் இங்கே குடிகொண்டுள்ள பெருமாளைப் புகழ்கிறார்.

"செங்கமலத் திருமகளும், புவியும்
செம்பொன்
திருவடியின் இணைவருட" (16:8)

என்பது அவர்தம் அருளிச்செயல் ஆகும். அதாவது மண்மகளும் திருமகளும் திருவடிகளை வருட முனிவரெலாம் போற்றிப் புகழ "அரவன் அணைத்துயின்ற மாயோனாக" பெருமாள் கிடந்த கோலத்திலே இங்கு அருளிச் செய்கிறார்.

மேலும் முன்னோரு காலத்தில் உலகேழும் இருள் சூழ, தேவர்கள் திகைக்க உடனே வேதங்களைக் கொணர்ந்து அருளிச் செய்த அதுவும் "பரிமுகமாய் அருளிய எம்பரமன் காண்மின்" என்று திரு அழுந்தூர் பெருமாளைத் திருமங்கை ஆழ்வார் காட்டுகிறார்.

இத்திவ்ய தேசத்திற்கு மங்களாசாசனம் செய்யும் போது "குலத்தலைய மதவேழம் பொய்கை புக்குக் கோள் முதலை பிடிக்க, அதற்கனுங்கி நின்று நிலத்திகழும் மலர்ச்சுடரே சோதீ" என்று கஜேந்திர ஆழ்வார்க்கு அருளியதையும் மங்கை மன்னன் நினைவூட்டுகிறார்.

மேலும் "புவிமடந்தையைக் காக்க எண்ணிய திருமால் பெரிய குன்று அளவு வடிவம் கொண்ட பன்றியாகித் தன் பற்களிடையே புவி மடந்தையை வைத்துக் கொண்டு வந்தார். அத்தகைய "எம் ஈசன் காண்மின்" என்று திரு அழுந்தூர் பெருமாளை ஆழ்வார் காட்டுகிறார். அத்துடன்

"வானவர்தம் துயர்தீர வந்து தோன்றி
மாணுருவாய் மூவடிமா வலியை வேண்டி
தானமர வேழுலகு மலிந்த வென்றித்
தனிமுதல்சக் கரப்படையென் தலைவன்
காண்மின் (1623)

என்று திருவழுந்தூர்ப் பெருமானிடம் வாமன அவதாரத்தையும் கண்டு மங்கை மன்னன் போற்றுகிறார்.



மெல்லிய விரல்கள் கொண்ட சீதாபிராட்டிக்காக வலிமையான இராவணனின் சிரங்களையும் கரங்களையும் வீழ வைத்த "அம்மான் காண்மின்" என்று இராமாவதாரத்தையும் ஆழ்வார் நினைவூட்டுகிறார். அடுத்து கிருஷ்ணாவதாரம் ஆழ்வாரின் மனக்கண்முன் தோன்றுகிறது. குவலயாபீடம் எனும் யானையின் கொம்புகளை ஒடித்து, காளைகளை அடக்கி, ஆயர்குலப் பெண்டிரோடு குரவைக் கூத்தாடி, மேலும் ஆய்ச்சியர் வைத்திருந்த தயிர் வெண்ணெய் முதலானவற்றை உண்டவனே இந்தப்பெருமான் என்று அவர் அருளிச் செய்கிறார்.

"கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
பறித்து, மழ விடையடர்த்துக் குரவை
கோத்து
வம்பவிழும் மலர்குழலாள் ஆய்ச்சி வைத்த
தயிர் வெண்ணெய் உண்டுகந்த
மாயோன் காண்மின்" (1625)

இங்ஙனம் திருஅழுந்தூரில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஆமருவியப்பன் எனும் திருநாமம் கொண்டு விளங்கும் பெருமானிடமே பல அவதாரங்களைக் கண்டு மகிழும். திருமங்கையாழ்வார் நமக்காக அவர் கண்ட திவ்ய காட்சியைப் பாசுரங்களாக அருளிச் செய்துள்ளார்.

# எண்ணச்சிதறல்

பேரன்புடையீர்!

ஆகஸ்ட் 2007 இதழில் பல சிறப்பு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சைவமும் வைணமும் கலந்து வந்துள்ளது பாராட்டுவதற்கு உரியது. திருக்கோயிலின் தலவரலாறு போன்ற விவரங்கள் தரிசிக்க வாய்ப்பாக உள்ளது. வாரியாரின் கட்டுரையில் தத்துவங்களை மிக எளிய உதாரணங்களுடன் விளக்கம் கொடுத்து உள்ளார். மகிழ்ச்சி தொடரட்டும்.

**த. புண்ணியகோட்டி, செய்யாறு**

அய்யா,

திருக்கோயில் புத்தகத்தில் சிறப்பான ஆன்மீக கருத்துக்கள் அடங்கிய புத்தகமாக இது உள்ளது. இந்த புத்தகத்தை ஒவ்வொருவரும் படிக்க வேண்டும்.

**பொன் முத்து, நாகப்பட்டினம்**

ஒப்பிலாதப் பெருமாளாய் விளங்கும் ஒப்பிலியப்பன் அருள்மிகு ஸ்ரீ வேங்கடாசலபதி திருக்கோயிலின் தெய்வீக வரலாற்றையும், அந்த அழகிய திருத்தலத்தின் மகத்துவங்களையும் படித்து அந்த திருத்தலத்தை தரிசித்த பரவசத்தை உணர்ந்தேன்! தங்கரதம் அமைக்கப்பெற்ற வைணவத்திருத்தலம் என்ற தகவல் பிரமிக்க வைத்தது மறக்க முடியாத ஆன்மிகத் திருத்தலக்கட்டுரை.

கருணைக்கடல் / காந்தியடிகள் மறைந்த நிகழ்வை அய்யன் வள்ளுவர் தீட்டிய 'தொழுத கையுள்ளும்....' என்ற குறளை மேற்கோள் காட்டி கலைஞர் வரைந்திட்ட குறளோவியத் துளிகள் கனமாய் நெஞ்சை நெகிழ வைத்து விட்டது! இச்சம்பவம் நிகழுமென்ற வள்ளுவரின் தீர்க்கதரிசனம் கண்டு வியக்க முடிந்தது!

**- த. சத்தியநாராயணன், அயன்புரம்**

சிவமயம்
திருச்சிற்றம்பலம்




**முன்னுரை :**

"ஈசனைப் பாடுதல் அடியார் பணி
ஆண்டவன் உரைவதும் அடியார் இதயத்தில்
அடியாரைப் போற்றி அவனியில் வாழ்க"

சமயக் குரவர்கள் நால்வரில் "மணி" யானவர் அடிகளேயல்லவா? திருவாதவூரர், தென்னவர், பிரமராயர் என்ற திருநாமங்களைக் கொண்ட மாணிக்கவாசகர் 'அடிகள்' என்றும் பெருமையோடும், மரியாதையோடும் சுட்டப்படுகிறார். ஞானசம்மந்தரைப் 'பிள்ளையார்' என்றும், அப்பர் பெருமானை 'அரசர்' என்றும், சுந்தரரை 'வன் தொண்டர்' என்றும் குறிப்பிடுவது மரபு. இறைவனிடமே திருவடித் தீக்கையைப் பெற்ற ஒப்பில்லாத அருளாளர் மாணிக்கவாசகர்.

மணிவாசகப் பெருமான் இயற்றியருளிய திருவாசகம் தோத்திர நூல்களிலேயே மிக சிறப்பான ஒன்று. பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்ட மாபெரும் பக்தி இலக்கியம் திருவாசகம். அழுது, தொழுது, அடம்பிடித்துக் கன்னித் தமிழில் இறைவன் புகழைப்பாடி அவன் அருளை ஈட்ட உதவும் நூல் திருவாசகம் "பக்தி வலையில் படுவோன் காண்க" என்று பக்தி நெறியை தெள்ளத் தெளிவாக அறிவுறுத்துகிறார் வாதவூரடிகள். "இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை, மனிதன் மனிதனுக்கு சொன்னது திருக்குறள், மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்" என்பது அருளாளர் கூற்று.

மாணிக்கவாசகரின் பெருமையும் திருவாசகத்தின் சிறப்பினையும் சிறிது சிந்தித்தல் கோகழியானின் அருட்பார்வையைப் பெற வழி வகுக்கும்.

**மாணிக்கவாசகரின் பெருமை**

பாண்டிய நாட்டிலே மதுரைக்கருகில் திருவாதவூர் என்னும் திருத்தலத்தில் மானமங்கலத்தூர் என அழைக்கப்பெறும் ஆமாத்தியர் குலத்தில் இறைவன் அருளால் சிவகணத் தலைவர் ஒருவர் மாணிக்கவாசகராகத் தோன்றியருளினார். தன் 16வது ஆண்டிற்குள்



திருவாதவூரர் ஆத்மநாயகர் ஆலயத்தினை கட்டுதல்

கல்வி கேள்விகளில் சிறந்து, சைவ நூல்களையும் தத்துவ நூல்களையும் உலகியல் நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். அரிமர்த்தன பாண்டியன் அரசவையில் முதலமைச்சராகப் பணியாற்றினார். மதுரைச் சொக்கநாதப் பெருமானிடம் பேரன்பு கொண்டவரானார். பாண்டிய நாட்டு சேனைக்கு ஒரு நூறாயிரம் குதிரைகள் வாங்க, அரசாங்கக் கருவூலப் பணத்தோடு புறப்பட்ட அவர், வழியில் திருப்பெருந்துறையை அடைந்தவுடன் இறையருளால் அத்திருத்தலத்திலேயே தங்கிவிட வேட்கை ஏற்பட, அத்தலக் கோவில் குருந்தமர நிழலில் இறைவன் குருவாகத் தோன்றி அடிகளாருக்கு நயனதீக்கையும், திருவடிதீக்கையும் தந்தருளினார். அம்மாத்திரத்தில் தன்வசம் இழந்து, பரமஞானம் வரப்பெற்று, மும்மல நீக்கம் எய்தி, சிவஞானச் செல்வரானார். நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்த நல்லருள் என்ற திருநாமத்தையும் குருநாதராக வந்தருளிய சிவபெருமான் அவருக்கு வழங்கினார். இறைவனுக்கு பாமாலைகள் பாடித் தொழுதார்.

குதிரைகள் வாங்கிவரத் தவறியதற்காக மன்னர் வழங்கிய சிறைத் தண்டனை, அவரைக் காப்பாற்ற நரிகளைப் பரிகளாக்கி பின்னர் பரிகளை நரிகளாகவும் ஆக்கி, பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டு சீவலீலைகள் புரிந்து அடிகளாரின் மேன்மையைப் புற உலகம் அறியச் செய்தது சிவபெருமானின் பெரும் கருணையே அன்றோ.

அடிகளாரின் பிறப்பியல்புச் சிறப்பு குறிப்பிடத்தக்கது. சமயக் குரவர்கள் நால்வரும் பிறப்பியல்பால் வேறுபாடு அற்றவர்களே. அனைவரும் கருவில் உருவாகி யோனி வழி வெளிப்பட்டவர்களே ஆயினும்

"நானார்என் உள்ளமார் ஞானங்களார்
என்னையாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல்"

என சுய சிந்தனை காணும் அடிகள் 'முன்னாளில், இறைவன் என்னை இவ்வுடலில் புகுத்தி இப்பிறவியிலேயே நுண்ணிய உபதேசமும் செய்து, குற்றத்தை நீக்கி, என்னை ஆட்கொண்ட அதிசயத்தை என்னவென்பது' என்று 'அதிசயப்பத்து' பதிகத்தில் அதிசயிக்கிறார்.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்த நல்லருள்



குருவே (இறைவனே) சீடனைத்தேடி வந்து அருளிய பெருமை மணிவாசகருக்கு மட்டுமே உண்டு. குருவைத் தேடியே மாணவன் செல்லும் உலக வழக்கிற்கு விந்தையான இந்த மாறுபாடு அன்னாருக்கு புகழ் சேர்க்கும் நிகழ்ச்சியாகும். ஆட்கொள்ளப்படும் சிறப்பினை ஒப்பு நோக்குகையில் 'பால்' புகட்டி சம்பந்தப் பெருமானையும் 'சூலை' தந்து அப்பர் பெருமானையும் 'ஓலை'யைக் காட்டி சுந்தரரையும் ஆட்கொண்ட இறைவன் நயனத் தீக்கையும், திருவடித் தீக்கையையும், பஞ்சாக்கர உபதேசமும் செய்தருளியது மாணிக்கவாசகருக்கு உள்ள மற்றுமோர் சிறப்பு.

காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டு அம்மானை வேண்டிப் பெற்றது 'அடியின் கீழ் இருத்தல்'. நாயன்மார் வரிசையில் திருவடிக்கீழ் 'அமர்ந்திருக்கும்' பேறு பெற்றவர்


அம்மையார் ஒருவரே. அறுபத்து மூவரில் ஒருவராக சேர்க்கப்படாத மணிவாசகர் திருவண்டப் பகுதியில் "என்னையும் இருப்பது ஆக்கினன்" என்கிறார். அருளியல் அனுபவப் பேற்றினுள் முடிநிலை பெறும் பேற்று அனுபவம் 'இருப்பதே' யாகும்.

'நாயிற் கடையேன்' என்று அடிகளார் தம்மைச் சுட்டிக் கொள்ளும் பாங்கு பொருள் பொதிந்த ஒன்றாகும். பெண்ணாசை பற்றி முப்பத்தொன்பது இடங்களில் பேசி உள்ளவர் பதின்மூன்று இடங்களில் "நாயிற் கடையேன் எனக் குறிப்பிடுகிறார். தேன் கலந்த எந்த உணவுப் பொருளையும் நாய் சாப்பிடாது. நம்மிடம் இத்தகைய நாய்க் குணம் இருப்பதனாலேயே இறைவன் திருவடித் தேனைப் பருக இயலாமல் உழலுகிறோம். இத்தகைய நாய்க் குணத்தை விட்டொழிக்க வேண்டும் என்பதையே அடிகளார் தம்மை 'நாயிற் கடையேன்' என்று சுட்டி நமக்கு அறிவுறுத்துகிறார்.

**திருவாசகத்தின் சிறப்பு**

திருவாசகம் ஒரு அருள் நூல். அனுபவ நூல், மெய்ஞ்ஞான விளக்க நூல். "தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்திற்கு திருமந்திரம்" என அடியார்களும் அருளாளர்களும் ஒருங்கே புகழும் நூல் திருவாசகம். சைவ உலகில் வலம் வரும் திருவாசகம் பக்திப் பரவசத்தில் நெஞ்சுருக இறைவனது புகழைப் பாடுகிறது. இதன் சிறப்புக்கள் பல, விரிவஞ்சி, சிலவற்றை மட்டுமே ஈண்டு சிந்திக்கத் துணிகிறோம்.

திருவாசகத்தில், சிவபுராணம் துவங்க அச்சோப்பதிகம் ஈறாக, 51 பதிகங்கள் உள்ளன. சிவபெருமானின் அநாதி முறைமையான பழமையைப் பாடும் சிவபுராணம் பதிகத்தில் 'நமசிவாய' என்று இறைவன் திருநாமத்தை விளித்து வாழ்த்துகிறார். வயதிலும் தகுதியிலும் உயர்ந்தோர் மட்டுமே இளையோரை வாழ்த்தலாமே அன்றி மனிதன் இறைவனை வாழ்த்துதல் எவ்வகையில் ஏற்புடைமை ஆகும்? உலக வழக்கிற்கு இது மாறுபட்ட ஒன்றல்லவா என்பது சர்ச்சை. 'நமசிவாய' என்பது தூல பஞ்சாட்சரம், 'சிவாய நம' என்பது சூட்சும பஞ்சாட்சரம். முன்னது விளித்து வாழ்த்தவும், பின்னது பாராயனத்திற்கும் உகந்ததாகும். இறைவன் எல்லா ஆன்மாக்களிலும், 'ஒன்றாயும், உடனாயும், வேறாயும் உள்ளான். இறைவனிடத்து உயிர்களையும், உயிர்களிடத்து இறைவனையும் காண்பது ஞானிகள் கண்ட வழி. ஆக உலக



உயிர்கள் அனைத்தையும் வாழ்த்துவதே அடிகளாரின் நோக்கம்.

திருவாசகம் முழுமையையும் இரண்டு பெரும் தொகுப்புக்களாகக் காணலாம். ஒன்று, திருப்பெருந்துறையில் தன்னை ஆட்கொண்ட சிவபெருமானை விட்டுப் பிரிந்ததனால் வருந்தி உரைத்தவை, இரண்டாவது கடையனான தன்னையும் ஆட்கொண்ட பரம்பொருளின் கருணையை நினைந்து உருகி உரைத்தவை. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது ஒரு முதுமொழி.

இறைவனின் வரிவடிவம் ஓங்காரம்: ஒலி வடிவம் நாதம். ஒலியுடன் கூடிய மறைமொழி வடிவமே திருவாசகம். இறைவன் வேறு, திருவாசகம் வேறல்ல.

'பூ' என்பது திருமகள் வாசம் செய்யும் தாமரை மலரைக் குறிப்பது போல, 'நாமங்கை' பிரம்மனின் நாக்கில் உறையும் கலைமகளைக் குறிப்பது போல 'பா' என்ற ஒரெழுத்து சுட்டுவது திருவாசகத்தைத்தான்.

திருவாசகம் வெறும் தோத்திர நூல் மட்டுமன்று, சாத்திரக் கருத்துக்கள் பல மலிந்துள்ள ஒரு சாத்திர நூலுமாகும். இதில் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்கள் பேசப்படுகின்றன. முப்பொருள்

உண்மை, இறைவனின் வியாபகத் தன்மை, பழ மலம் என்னும் மூல மலம் ஆகியவற்றையும் திருவாசகம் பேசுகிறது. இறைவன் உயிர்களோடு 'ஒன்றாய், உடனாய், வேறாய்' இருத்தலைப் பற்றியும், முக்தி நிலையில் உயிர் சிவமாம் தன்மை பெறுதலாகிய அடிப்படைச் சித்தாந்தக் கருத்துக்களும் இந்நூலில் இடம் பெறுகின்றன.

ஆகமங்கள் ஆன்மாக்களின் மலத்தை நாசம் செய்து, ஞானத்தைத் தோற்றுவித்து, மோட்சத்தைத் தரவல்லன (ஆ=ஞானம், க=மோட்சம், ம=மல நாசம்) சிவாகமங்கட்கு முதலிடம் வழங்குகிறது திருவாசகம். "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தான் வாழ்க" என்பது அடிகள் கூற்று. மூவர் முதலிகள் வேதங்களுக்கு முதலிடம் வழங்கி உள்ளனர். 'நால்வர் நான்மணிமாலை' யில் சிவப்பிரகாசர் "ஆரணி மொழி (வேதங்கள்) யை விட வாதவூரரின் திருவாசகத் தேனே அல்லவா கேட்போரை உருக வைக்கும்" என வியக்கிறார்.

முதல் ஏழு திருமுறைகட்கு இறைவனின் கைங்கரியம் முதலடிகளை வழங்கியது மட்டுமே ஆகும். ஞானசம்பந்தரின் தேவாரத்தில் "தோடுடைய செவியன்" என்ற சொற்றொடர், அப்பர் தேவாரத்தில் "கூற்றாயினவாறு" என்பது, சுந்தரரின் தேவாரத்தில் 'பித்தா பிறை சூடி' என்பது இறையனார் வழங்கிய அருள் உரைகளாகும். திருவாசகம் தில்லை திருக்கோயிலில் மாணிக்கவாசகர் சொல்ல, தில்லைக் கூத்தனே தன் திருக்கையால் எழுதியது இந்நூலின் மாபெரும் சிறப்பாகும்.

முதற் பதிகமாகிய சிவபுராணம், நூலின் மொத்த பாடல் எண்ணிக்கையை மறைமுகமாகச் சுட்டுகின்றது எனலாம். சிவபுராணத்தில் முதல் பதினாறு வரிகளைப் பாருங்கள். இவற்றில் 'வாழ்க' 'வெல்க' 'போற்றி' என்ற சொல்லாட்சிகளைக் கவனியுங்கள் 'வாழ்க' என்று முடிவன 6: 'வெல்க' என்று முடிவன 5: 'போற்றி' என்று முடிவன 8. ஆக, 6,5,8 என்ற எண்களின் தொகுப்பு 658 ஆகும். இது திருவாசகத்தில் அடங்கியுள்ள 658 பாடல்களைக் குறிப்பதாகும்.

சிவபுராணம் காட்டுவது இரு வகைப் பெருநெறிகளை. நமசிவாயப் பொதுமைப் பெருநெறி, சிவாயநமப் பெருநெறி (சிறப்பு நெறி). முன்னது சகலருக்கு உரியது - முயன்று, இறைவன் திருவடிப் பேற்றினை அடையும் நெறியாகும். பின்னது, மணிவாசகப் பெருமான் பெற்ற சிறப்பு நெறி. இதில், இறைவன் தாமே வந்து, தன்னைக் கொடுத்து, ஆன்மாவைத் தனதாக்கி, தன் திருவடிப் பேற்றை அருளுவதாகும். "நானேயோ தவம் செய்தேன்", சிவாய நம எனப்பெற்றேன்" என்பது மணிவாசகரின் திருவாய் மொழி.

"சிவனை ஓதி உணர முடியாது, உள்ளத்தில் தேடியே உணர வேண்டும். என்பது சித்தாந்த சைவத்தின் துணிபு. இதையே மணிவாசகர் பெரும் வேள்வியாகச் செய்து 'சிவாய நம' எனப்பெற்றார்.

**நிறைவுரை:**

திருவாசகமே ஒரு திருக்கோயில், ஆத்ம நாயகி உடனுறை ஆத்மநாதர் ஆலயம். இதில் மூல்வர் மொழி வடிவத் திருமேனி கொண்ட ஆத்மநாதர்: உத்சவர் நமச்சிவாயம்: பண்டாய நான்மறைகள் நான் மதிர்ச் சுவர்கள்: நான்கு அகவல்கள் நான்கு கோபுரங்கள்: அவற்றுள் அரச கோபுரம் சிவபுராணம்.

திருவாசகத்தால் கவரப்பட்ட அருளாளர்கள் தாயுமானவர், இராமலிங்க அடிகள், ஜி.யு.போப் ஐயர், உட்பட பலர் ஆவர்.

திருவாசகத்தின் ஏழாவது பதிகமாகிய திருவெம்பாவையையும் மணிவாசகரின் பிரிதொரு அருள் நூலான திருக் கோவையாரையும் ஆய்வு செய்யும் (திருக்கோயில் ஜூலை-2007) திருவாவடுதுறை ஆதின சித்தாந்தப் பேராசிரியர் சித்தாந்த வித்தியாநிதி சு. சண்முகவேல் அவர்கள் "சித்திரக் கவிக்கு ஞான சம்பந்தரும், தாண்டகத்திற்கு அப்பரும், அந்தாதிக்குக் காரைக்கால் அம்மையாரும், உலாவுக்குச் சேரமான் பெருமாள் நாயனாரும் கண்டது போன்று கோவைக்கு வாசகரும் மூல இலக்கியம் கண்டார்" என்று கூறி கோவைக்கு மூல இலக்கியம் கண்டதற்காக மணிவாசகரைப் போற்றுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களையுடைய உயிரினங்கள் அனைத்திற்கும் சிவபெருமானே முழு முதற்கடவுள் என்று கூறும் மணிவாசகப் பெருந்தகை தம் வாழ்வாலும், வாக்காலும் அன்பு நெறிக்கும் பக்தி நெறிக்கும் ஏற்றம் கண்டு வளம் சேர்த்தார்.


பக்தியின் உச்சகட்டம் அன்பு மேலீடு. இறைவன் துதிப்பதற்காக மட்டுமல்ல, துய்ப்பதற்கும் தான். சிவப் பரம்பொருளை துதித்துத் துய்ப்பதில் மணிவாசகப் பெருமானை மிஞ்சக் கூடியவர் வேறு யாரும் இல்லை என்று துணியலாம்.



சித்தாந்த இரத்தினம்
டாக்டர் **எம்.ஆர். சந்தானம்**

# வகுளகிரி ஸ்ரீ வெங்கடாஜலபதி

வகுளகிரி திருத்தலம் (கருங்குளம்) என்று சொல்லப்படும், இத்தென்திருமலைத் திருப்பதி. தூத்துக்குடி மாவட்டத்தில், திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில், திருநெல்வேலியிலிருந்து சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மலைமேல் திருப்பதியாக இருக்கும் வேங்கடாஜலபதி என்னும் ஏழுமலையான் அடியார்கள் குறைகள் தீர்க்கும் வேங்கடாஜலபதியாக இங்கே எழுந்தருளியுள்ளார். பலநூறு ஆண்டுகளுக்கு முன் பாக்வீகம் (இன்றைய பாக்கிஸ்தான்) என்று சொல்லப்படும் தேசத்தை கல்காரம் (இன்றைய கராட்ச்சி) என்ற நகரத்தை தலைநகராகக் கொண்டு சுபகண்டன் என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான். அவ்வரசனுக்கு கண்டமாலை என்னும் கொடிய நோய் வரவே, மருத்துவம் பல செய்தும் நீங்கவில்லை. திருமலையில் கூடியிருக்கும் திருவேங்கடவன் அரசனின் கனவில் வந்து சந்தன மரத்தினால் தேர் ஒன்று செய். அதில் இரு தூண்கள் மீதமாகும். அதை தென்பாண்டிய தேசத்தில் தாமிரபரணி ஆற்றங்கரை அருகில் மலையில் (வகுளகிரி என்னும் மலையில்) குன்றின் மீது இருக்கும் சீனிவாசபெருமாள் சன்னதிக்கும், உறங்காப் புளிய மரத்திற்கும் மத்தியில் (நடுவில்) பிரதிட்டை செய். உறங்காபுளி (பூ பூக்கும் காய் காய்க்காது) ஊறாக்கிணறு, காயாத்தென்னை என்ற அடையாளங்கள் வகுளகிரி மலையின் மேல் இருக்கும். அங்கு செல்லும் சமயம் பசுங்கன்று ஒன்று வழிநடத்திச் செல்லும், அது எங்கு படுக்கிறதோ அங்கு இவ்விரு தேர்க்கால்களையும் பிரதிட்டை செய்து வழிபட்டால் நோய் நீங்கும் என்று கூறி மறைந்தார். மன்னனும் தென்பாண்டிய தேசத்தில் வகுளகிரி குன்றின் மீது மலையேற தொடங்கினான். கருடன் ஒன்று, அரசனுடைய தலைக்கு மேல் ஆகாயத்தில் வட்டம் அடித்தவாறு வந்தது. பசுங்கன்றானது உறங்காபுளி மற்றும் சீனிவாசப் பெருமாள் கோயில் இரண்டிற்கும்



இடையில் போய்ப் படுத்துக் கொண்டது. அச்சமயம் கதிரவன் மேல் திசையில் மறையும் நேரமாகி விட்டபடியால் மறுநாள் இவ்விரு தேர்க்கால்களையும் பிரதிட்டை செய்துவிடலாம் என்று படுத்து உறங்கி விட்டான். மறுநாள் காலையில் அரசன் கண்விழிக்கும் போது (திருமால் தெய்வம் ஏழுமலையான்) பிரதிட்டை செய்யப்பட்டிருப்பதை பார்த்த அரசன் ஆனந்த கண்ணீர் வடித்தான். அதனால் இத்திருத்தலம் (ஸ்வயம்பு) என்று அழைக்கப்படுகிறது. சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்னதாகவே பிரதிட்டை நடந்ததாக சொல்லப்படுகிறது.

பெருமாள் திருநாமம் : வெங்கடாஜலபதி. ஸ்தல விருக்ஷம் : உறங்கா புளியமரம். சீனிவாசபெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி தாயார் உள்ளனர். உற்சவர் : சீனிவாசர். தீர்த்தம் : தாமிரபரணி. சித்திரை மாதம் (சித்திரா பௌர்ணமி) அன்று ஆண்டுதோறும் உற்சவங்கள்

சுந்தராஜ பட்டாச்சாரியார்

நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரம்பரை கட்டளைதார்கள் உள்ளனர். இரவு 10 நாட்களும் ஒவ்வொரு வாகனமும், 10வது நாள் சுவாமி மலையில் இருந்து கீழ்இறங்கி வீதியுலா வந்து 11வது நாள் மலையேறுவார் அப்போது பக்தகோடிகள் வெங்கடாஜலபதி சுவாமிக்கு ஜெய். சீனிவாச சுவாமிக்கு ஜெய் என்று முழக்கமிடுவர். இதை தவிர ஒவ்வொரு மாதமும் எல்லா விழாக்களும் நடைபெறும். புரட்டாசி மாதத்தில் எல்லா சனிக்கிழமைகளிலும் கெருட சேவையும், புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமையன்று சதா அஷ்டக கலசம் (நூற்றிஎட்டு கலச திருமஞ்சனம்) நடைபெறும் பின்பு அன்னதானமும் உண்டு. மாதம்தோறும் பெருமாள் திருநட்சத்திரமான திருவோணத்தன்று பாயாச கட்டளை நடத்தப்படுகிறது. இது குழந்தை இல்லா தம்பதிகளுக்கு நடத்தப்படும் கட்டளையாகும். குழந்தை இல்லா தம்பதிகள் விரதத்துடன் வெங்கடாஜலபதியை நினைத்து பாயாச கட்டளை செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். சித்திரை வருட பிறப்பு, ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், நவராத்திரி, திருக்கார்த்திகை, வைகுண்ட ஏகாதசி, ஆங்கில வருட பிறப்பு, தமிழ் வருட பிறப்பு, மாதம்தோறும் திருவோணம் ஆகிய சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகிறது. மாசி மாதம் மக நட்சத்திரம் அன்று லட்சார்ச்சனை புஷ்பாஞ்சலி வெகு. சிறப்பாக நடைபெறும். பிரார்த்தனை வழிபாடுகள் (கெருட சேவை நடைபெறும்) பவித்திர உற்சவங்கள் நடைபெறுகிறது. தங்கள் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேற, இடையூறுகள் விலக, வேலையில் வெற்றிபெற போன்ற பலகாரணங்களுக்கு இங்கு நீராஞ்சனம் என்று சொல்லப்படும் தேங்காயை உடைத்து பச்சரிசியின் மேல் வைத்து நல்லெண்ணை அல்லது நெய் தீபம் போடுவது தனி சிறப்பாகும். முக்கியமாக இங்கு மூலவர் வெங்கடாஜலபதிக்கு தினமும் தாமிரபரணி நீரால் திருமஞ்சனம் பெருமாளுக்கு நடைபெறுவது தனி சிறப்பாகும்.

"ஸ்ரீ வகுளாசல வாஸாய வாஞ்சதிரார்த்த ப்ரதாயினே

தாரு போய சத்யாய நமஸ்தே பரமாத்மினே.

- ஸ்தலபுராணம்

எதை எதை பக்தர்கள் என்னை நாடி ஸ்ரத்தையுடன் சேவிக்கிறார்களே அதை அதை கோரிய இஷ்டங்களை அடைகிறார்கள்.

வகுளகிரி வேங்கடவனை வழிபட்டு வாழ்வில் வளங்கள் பல பெறுவோமே.



"பூனை தன் குட்டிகளைப் பற்களால் பிடிக்கும்போது அக்குட்டிகளுக்குத் தீங்குண்டாவதில்லை. ஆனால் அப்படி ஓர் எலியைப் பிடித்தால் அது உடனே இறக்கிறது. இதைப் போலவே மாயை மற்றவர்களை வருத்தினாலும் பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது."

- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4. உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5. உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034,
என்ற முகவரிக்கு அனுப்பவும்

சிவன்மலை

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

"சிவமலை யென்றிடச் சிதையுந் தீவினை
சிவமலை யென்றிடத் திருவந் தெய்திடும்
சிவமலை யென்றிடச் சேரும் புண்ணியம்
சிவமலை யென்றிடச் சித்தியாகுமால்"

- சிவன்மலை புராணம்

**குன்றுதோறாடல்**

முருகன் மலைஉறைகடவுள் என்பது பெருவழக்கு. மலைவாழ் மக்களாகிய குன்றவர் போற்றும் தெய்வம். மலையும் மலைசார் நிலமும் ஆகிய குறிஞ்சி நிலம் இவனுக்கு உரிய நிலம். எனவே, இவனுக்குக் 'குறிஞ்சிக் கிழவன்' (முருக.267) என்னும் ஒரு பெயரும் வழங்கி வருகிறது. "பிறங்கு மலை மீமிசைக் கடவுள்" (குறிஞ்சி.208-209) என்று இவனைக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிட்டுள்ளது. இவன் பிற நிலப்பகுதியினராலும் வணங்கிப் போற்றப்பட்டவனே. "காடு கெழு நெடுவேள்" (அக.5) என்றும் இவன் சிறப்பிக்கப்படுகிறான்.

"ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்,
வேலன் தைஇய வெறு அயர் களனும்,
காடும் காவும், கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும், வேறுபல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை
நிலையினும்" (முருகு 220-226)

என்று இப்பெருமான் வழிபடப் பெறுதலை திருமுருகாற்றுப்படையினால் தெளியலாம்.

**அமைவிடம்**

கொங்கு நாட்டின் குன்றுதோறாடல் திருத்தலங்களில் புகழ்பெற்றது சிவன்மலை. புராணப்பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் இலக்கிய ஏற்றமும் பெற்ற மலை சிவன்மலை. நூறு ஏக்கர் பரப்பளவில் தரை மட்டத்திலிருந்து ஐநூறு அடி உயரம் கொண்ட அழகான குன்றின் மீது இத்திருக்கோயில் அமைந்துள்ளது. 496 படிகளை கொண்ட பாதையும் 2 கிலோ மீட்டர் நீளத்தில் வாகனங்கள் மலைமீது சென்று திரும்பும் வகையில் மலைப்பாதையும் அமையப்பெற்றது. திருக்கோயில் மூலம் இரண்டு பேருந்தும் ஒரு சிற்றுந்தும் சேவார்த்திகளின் வசதிக்காக இயக்கப்படுகிறது. காங்கயத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் திருப்பூர் செல்லும் பாதையில் இத்தலம் அமையப்பெற்றுள்ளது.

முருகன் திருத்தலங்கள் ஒரே நேர்க்கோட்டில் வைத்தாற்போல் பழனி மலையில் போகராலும் பழனியிலிருந்து 35 மைல் நேர் வடக்கில் பொன்னூதிமலை கொங்கணச்சித்தராலும், ஊதியூரிலிருந்து நேர் வடக்கே 11 மைல் கல்லில் சிவன்மலையில் உள்ள சுப்பிரமணியசுவாமியை சிவவாக்கியராலும் சிவன்மலையிலிருந்து நேர் வடக்காக 11 மைல் கல் தூரத்தில் உள்ள சென்னிமலை சுப்பிரமணியசுவாமியை பிண்ணாக்கு சித்தராலும் (பின் நாக்கு) பிரதிஷ்டை செய்யப்பட்ட தலங்களாகும். இதற்கு சான்றாக பழனி மலையில் போகர் சமாதியும், ஊதியூரில் கொங்கணர் கோயில் என்ற கொங்கணர் தவநிலையும், சிவன்மலையில் சிவவாக்கியர் தவநிலையும் சென்னிமலையில் பின்னாக்கு (பிண்ணாக்கு சித்தர்) கோயிலும் இன்றும் மக்களால் வணங்கி பூஜிக்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு சித்தர்கள் பிரதிஷ்டை செய்து வணங்கப்பட்ட தலங்கள் ஒரே நேர்க்கோட்டில் 60 மைல் கல் தொலைவுக்குள் அமைந்துள்ளது வியப்புக்குரியதாகும். இந்த





தெரிதமிழ்தேர் சிவமலை, செல்வச்சிவமலை, வடித்த செந்தமிழ் சிவராத்திரி, வலிமைசேர் சிவசலம், புவனம் பரவும் சிவமலை, கல்யாண சிவமலை, இருநிதிசூழ் சிவமலை, மகிமை சேர் சிவமலை, தவசுபுரி சிவமலை எனக் குறிக்கப்படுகிறது.

சிவமலையின் பழைய பெயரான பட்டாலி இலக்கிய புகழ் பெற்ற பேரூர். இங்கு அமைந்துள்ள பால்வெண்ணீஸ்வரர் நல்ல மங்கையம்மன் திருக்கோயில் புகழ்பெற்றதாகும். இத்திருக்கோயிலை இணைத்து சிவமலை பக்தி இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றது.

அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன்மலை, பட்டாலி சிவாசலம், ஞாலம் புகும் பட்டாலிச் சிவமலை நன்னகர் என்பன இதை உறுதிப்படுத்துகின்றன.

"செல்வப்பட்டாலியில் பால்வண்ணர் பாலன்"
"செல்வப்பட்டாலி யூரன்"
"பக்தர் பணி பட்டாலிச் சித்தர்"
"சிகரகோ புரமும் தெருஇரு புறமும்
அகரசீ கரமும் அன்னசத் திரமும்
மாடமா ளிகையும் கூடகோ ளகையும்
நீடுறு சுகனத்து ஆடிடு கொடியும்
அந்தணர் வேள்வியும் செந்தமிழ்க் கேள்வியும்
உந்திய குடிகள் உலவுசந் தடியும்
பூமலர் ஓடையும் மாமணி மேடையும்
பூமினார் ஆடலும் காமனார் கூடலும்"
கிட்டாது வானமும் கட்டோடு சோலையின்
மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாலி யூரன்"

என்று சிவமலையில் எழிலுருதோற்றமும் அதில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் பெருமையும் குறிக்கப்பெறுகிறது.

நான்கு தலங்களும் அருணகிரிநாதர் வணங்கி தமது சந்தத்தமிழ் பாக்களால் உருகிப் பாடல் பெற்றவைகளாகும்.

**பெயர்ச்சிறப்பு**


நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை சிவன்மலை கிராமம் பட்டாலி கிராமம் என அழைக்கப்பட்டது. பட்டாலி கிராமம் ரோமாபுரி வரை சங்க காலத்தில் வணிகத் தொடர்பு உடையதாக வரலாற்றில் குறிக்கப்படுகிறது. மூர்த்தி, தலம், புராணம், இலக்கியம் ஆகிய நான்கு வகையிலும் சிறந்து சிவன்மலை விளங்குகிறது. சிவன்மலை தலம் கீழ்க்கண்ட இலக்கிய நூல்களைப் பெற்றுள்ளது. 1) திருப்புகழ், 2) சிவமலைப்புராணம், 3) சிவமலைக்குறவஞ்சி, 4) சிவமலைப் பிள்ளைத்தமிழ், 5) சிவமலை மயில் விடு தூது, 6) சிவமலை நொண்டிச்சிந்து, 7) சீட்டுக்கவிகள், 8) தனிப்பாடல்கள் இவை மட்டுமன்றி சிவமலை மகிமை வடமொழியில் உள்ள கந்த புராணத்தில் ஈச சங்கிதையில் குறிக்கப்படுகிறது.

இன்று எழுத்திலும் பேச்சிலும் சிவன்மலை எனப்படும் இவ்வூருக்கு சிவவாக்கிய சித்தருக்கு முருகன் காட்சி தந்து உபதேசம் வழங்கி சிவவாக்கியர் இங்கு கோயில் அமைத்ததால் 'சிவமலை' என்று அழைக்கப்பெற்றதே இதன் பழைய பெயராகும். இத்தலத்தை பாடிய பழம்பெரும் நூல்கள் அனைத்தும் சிவமலை என்றே கூறுகிறது. பழைய வரலாற்று ஆவணங்கள் இலக்கியங்கள் சிவன்மலை என்றே கூறுகிறது. மக்களின் பேச்சு வழக்காற்றில் சிவமலை-சிவன்மலை என மருவியுள்ளது.

இத்தலத்தின் பெயர்கள் இலக்கியங்களில்

**தலத்தின் மகிமை**

இத்திருக்கோயிலில் மூலவர் சுப்பிரமணியராக வள்ளியுடன் தனது வாகனமான வடக்கு முகம் பார்த்த மயிலுடன் கிழக்குப் பார்த்த சன்னதியில் காட்சியளிக்கிறார். எல்லா தலங்களிலும் முதலில் பிள்ளையாருக்குப் பூஜை செய்து பின்பு அந்த மூலவர்களுக்கு பூஜை செய்வது வழக்கம். ஆனால் இங்கு மூலவருக்கு



பூஜைகள் முடித்த பின்பே இங்குள்ள விநாயகருக்கு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

**சிவவாக்கியர் தவநிலை**

பதினெண் சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் இங்குள்ள மூலவரை பிரதிஷ்டை செய்து வணங்கி காட்சி பெற்றதால் இத்திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் சிவவாக்கியர் அமர்ந்து தவமிருந்த சிவவாக்கியர் தவநிலை உள்ளது. சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் வள்ளியுடன் வடக்குமுகம் பார்த்த மயில் வாகனத்துடன் முருகன் காட்சியளிப்பதாக கருதப்படுகிறது.

**பொருள் வைத்து பூஜை செய்தல்**

இத்திருக்கோயிலின் மிகச்சிறப்பு இங்கு பொருள் வைத்து பூஜை செய்தல் என்பது ஆகும். சேவார்த்திகளுடைய கனவில் சிவன்மலை ஆண்டவர் என்று இப்பகுதி வாழ் மக்களால் அழைக்கப்படும் முருகப்பெருமான் இத்திருக்கோயிலின் சேவார்த்திகள் அல்லது யாராவது ஒருவர் கனவில் தோன்றி "என்னுடைய சன்னதிக்கு இன்ன பொருளை கொண்டுவா" என உணர்த்தினால் அவர்கள் அப்பொருளை திருக்கோயிலுக்கு எடுத்துக் கொண்டு வருகின்றனர். இப்பொருள் இறைவா நீ உணர்த்திய பொருளா என்று இறைவனுடைய சன்னதியில் பூ வைத்து அனுமதி கேட்கின்றனர். அனுமதி கொடுத்தால் அப்பொருள் இத்திருக்கோயிலினுடைய முன் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள கண்ணாடி பேழையில் வைக்கப்படுகிறது. இப்பொருள் மீண்டும் ஒருவர் இவ்வாறு கொண்டுவரும் பொழுது அனுமதி வழங்கப்பட்டால் புதிய பொருள் வைக்கப்பட்டு ஏற்கனவே இருந்த பொருள் எடுக்கப்படுகிறது.

இப்பேழையில் ஆண்டவன் உத்தரவு பொருள் என்று வைக்கப்படும் பொருள் உலகில் நடைபெறும் சம்பவங்களுக்கு சகுன பொருளாக, குறியீடாக இப்பகுதி வாழ் மக்களால் பன்னெடுங்காலமாக நம்பப்பட்டு வருகிறது. இவ்வாறு இதில் வைக்கப்பட்ட பொருள்களுக்கும் நடந்த சம்பவங்களும் மக்களால் தொடர்புபடுத்தி காலங்காலமாக பேசப்பட்டு வருகிறது.

**முருகன் ஊர்தி நித்திய தரிசனம்**

முருகப்பெருமானுக்கு யானையும், மயிலும் ஊர்தியாக அமையப்பெற்றது. இவன் ஏறிச்செலுத்தும் மயில் ஊர்தி மிகவும் விரைந்துசெல்லும் இயல்புடையது. "விரைமயில் மேல் ஞாயிறு" என்று பரிபாடலில் முருகப்பெருமான் குறிக்கப்படுகிறார். அச்சிறப்புமிக்க மயில்கள் தினமும் காலையிலும், மாலையிலும் சன்னதியின் முன்பு உலாவிச் செல்லுதல் இத்தலத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும். இத்திருக்கோயில் மயில்களுக்கு தானியங்கள் உணவாக தினமும் வழங்கப்பட்டு வருகிறது.

**அன்னதான சிவாசலபதி**

இத்திருக்கோயிலில் அமையப்பெற்ற முருகப்பெருமானுக்கு அன்னதான சிவாசலபதி என்று ஒரு பெயரும் உண்டு. இத்திருக்கோயிலில் வருடந்தோறும் நடைபெற்று வரும் தைப்பூசத் திருவிழா பிரமோற்சவமாகும். இத்திருவிழாவின்போது ஈரோடு, கோவை, திண்டுக்கல், கரூர், நாமக்கல், நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பலவிதமான காவடிகளை எடுத்து வருகின்றனர். அப்பொழுது கிராமம் கிராமமாக ஒன்றுகூடி காவடிகளை எடுத்துவரும் மக்கள் இங்கு ஒரு நாள், இரண்டு நாள் என தங்களது வசதிக்கு தகுந்தாற்போல் திருவிழாவிற்கு வருகின்ற அனைத்து மக்களுக்கும் உணவளிக்கின்றனர்.

தைப்பூசத் திருவிழாவின்போது சிவன்மலையில் திரும்பிய பக்கம் எல்லாம் பொதுமக்களாலேயே அன்னதானம் வழங்கப்படுகிறது. தைப்பூசத் தேரோட்டத்தின் மூன்று நாட்களில் மட்டும் சுமார் 500 மூட்டை அரிசிக்கு மேல் உபயோகித்து உணவு சமைத்து அன்னதானமாக வழங்கப்பெறுவது இத்திருக்கோயில் தைப்பூசத் திருவிழாவின் சிறப்பாகும்.

**கந்தனை வணங்குவோம்**

பரிபாடலிலும், திருமுருகாற்றுப் படையிலும் முதலில் இந்திரனே முருகனை எதிர்த்துத் தோற்று, முருகனைத் தேவசேனாபதி என்று உணர்ந்து கொண்டான் என்று கூறப்பட்டுள்ளது.

அக்கினி கோழியையும், இந்திரன் மயிலையும், யமன் வெள்ளாட்டுக் கிடாவையும், பிற தேவர்கள் தத்தம் உடம்பு உறுப்புகளிலிருந்து செய்த ஒவ்வொரு ஆயுதங்களையும் முருகனுக்குத் தந்ததாகப் பரிபாடல் கூறுகிறது. தேவப் பதங்கள் எல்லாம் முருகனுக்கு அடைக்கலம் என்ற உண்மையை இக்குறிப்பு காட்டுகிறது.

முருகப் பெருமானே தன் வேலினை மதித்துப் பாராட்டியதாகத் திருமுருகாற்றுப்படை கூறுவது எண்ணத்தக்கது.

சமணப் புலவராகிய திருத்தக்க தேவர் தன் 'சீவக சிந்தாமணி" யில் கிரவுஞ்ச மலையை முருகனின் வேல் பிளந்ததைக் கூறுகிறார். முருகனைப் "பூவினுள் பிறந்த தோன்றல்" என்றே கூறுகிறார்.

சிலப்பதிகாரத்தில் முருகனைப் பற்றிய செய்திகள் நிரம்ப வருகின்றன. முருகனை வணங்கும் முறை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

பன்னிரு திருமுறைகளில் முருகன் பல இடங்களில் போற்றப்படுகிறார்.

தமிழ் இலக்கியங்களில் மட்டுமின்றி வடமொழி வேதம், ஆகமம், காப்பியங்கள் ஆகியவற்றிலும் கந்தன் புகழ் பேசப்படுகிறது. வேதத்திலும் சாந்தோக்கிய உபநிடகத்திலும் சுப்ரமணியர், ஸ்கந்தர் என்று சொல்லாட்சிகள் வருகின்றன.

காமிகம், காரணம், சுப்ரபேதம், குமாரதந்திரம், அம்சுமத்பேதம் ஆகிய ஆகமங்களில் முருகனைப் பற்றி வருகின்றன. எல்லா நூல்களிலும் தீமையை அழித்து நன்மையை நிறுவும் கருணைக் கடவுள் கந்தன் என்றே வருகிறது. அப்படிப்பட்ட கந்தபெருமான் இத்திருத்தலத்தில் நித்திய திருவிளையாடல்களையும் அற்புதங்களையும் காட்டி வருகின்றார்.




சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 15-08-2007 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா.ஆவுடையப்பன் அவர்களும் திருக்கோயில் அறங்காவலர்கள் திருமதி விஜயா தாய்ன்பன் அவர்கள், பொழிச்சலூர் வைத்தியநாத முதலியார் அவர்கள், திரு. என். இளங்கோவன் அவர்கள் மற்றும் பங்கேற்றோரும்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம்

# அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில்

அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில் திண்டுக்கல் மாவட்டம் & வட்டம், திண்டுக்கல் பழனி நெடுஞ்சாலையில் ரெட்டியார் சத்திரத்திலிருந்து தென் மேற்கே சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் காமாட்சிபுரம் கிராமத்தில் கோபிநாதசுவாமிமலை உச்சியில் திருக்கோயில் உள்ளது. இம்மலை முக்கோண கூம்பு வடிவமாகவும் மலை அடிவாரத்தில் மாங்கரை என்னும் ஆறும் அமைந்திருப்பது இம்மலைக்கு அழகு தருகிறது. இத்திருக்கோயில் 1884ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.

தல வரலாறு :

13 ஆம் நூற்றாண்டில் காசி யாத்திரை மேற்கொண்ட அந்தணர் ஒருவர் வழியில் ஆந்திர மாநிலம் “பெல்லாரி” தேசத்தை அடைந்ததாகவும், அந்நாடு மழையின்றி கடும் வறட்சியின் பிடியில் உள்ளதை அறிந்து தமக்கு உணவு வேண்டி பெல்லாரியை ஆண்ட வல்லாள மன்னரை அணுகிய பொழுது பஞ்சத்தின் காரணமாக தம் மக்கள் படும் துயர்கண்டு மிகுந்த மனக்கவலையில் இருந்த மன்னர் அந்நிலையிலும் காசியாத்திரை செல்லும் அந்தணரை இன்முகத்துடன் வரவேற்று, தம் நாட்டின் வறட்சி நிலை உணர்த்தி, அந்தணருக்கு அமுது படைத்தார். பட்டினியால் மக்கள் படும் துயரத்துடன் அந்நாட்டில் பசுக்கூட்டங்களும், கால்நடைகளும் படும் சொல்லொன்னாத துயர்கண்டு மன்னனிடம், “மன்னா கலங்காதே நீயும் உன் மக்களும், பசுக்கூட்டங்களும் தெற்கே பாண்டிய நாட்டினை நோக்கிச் செல்” உன் துயர் நீங்கும் என உரைத்தார். அதனை செவிமடுக்க மறுத்த மன்னர் கடுந்துயரத்துடனே மறைந்தார்.



வல்லாள மன்னர் மறைந்த பின்னர், மன்னரின் புதல்வன் கோபிநாதனும் தாயார் கோப்பம்மாளும் தமது பசுக்கூட்டத்துடன் பாண்டி நாடு நோக்கிப் பயணம் செய்தபொழுது, ரெட்டியார்சத்திரம் அருகில் இருந்த குன்றினைக் கண்டு அங்கேயே தங்கி தமது பசுக்கூட்டங்களுடன் மிகவும் செழிப்பாக வாழ்ந்து வந்தனர். அங்கும் மழையின்றி வறட்சி ஏற்பட்டு, கலங்கிய கோபிநாதன் இறைவனிடம், “இறைவா எங்களை விட எங்கள் கால்நடைகள் படும் துன்பம், காண இயலாததாக உள்ளது. உடனடியாக மழை பொழிந்து எங்களைக் காத்தருள வேண்டும். அவ்வாறே நடந்தால், நான் என் இன்னுயிரை துறக்கிறேன்” என மனமுருகி பிரார்த்தனை செய்ய, அப்பகுதியில் மழை பொழிந்து வளம் கொழித்தது. பசுக்கூட்டங்களும் கால்நடைகளும் மகிழ்ச்சியில் துள்ளி குதித்தன.

அதனைக் கண்டு மனம் மகிழ்ந்த கோபிநாதன், தமது உயிரைக் காணிக்கை ஆக்குவதாக, இறைவனிடம் செய்து கொடுத்த சத்தியத்தின்படி, தமது கால்நடைகளுக்காக, குன்றின் உச்சியில் தமது இன்னுயிர் துறக்க, மகனுக்கு உணவு கொண்டு சென்ற கோப்பம்மாள் குன்றின் உச்சியில் தமது மகன் உயிர் துறந்த

நிலைகண்டு, தாமும் இறைவனடி சேர்ந்தார். ஆனால் தமது நாயகனான கோபிநாதன் துணையின்றி, பசுக்கூட்டங்கள் வாழ்ந்து வந்தன. பின்னர் கோபிநாதனும் தாயார் கோப்பம்மாள் இருவரும் இம்மலையில் தெய்வமாக இருந்து பசுக்கூட்டங்களை காப்பாற்றி வருவதாக பக்தர்கள் நம்பி வழிபாடு செய்து வருகின்றனர்.

ரெட்டியார்சத்திரம் குன்றின் மீது அருள்மிகு கோபிநாதன் புல்லாங்குழலுடன் கிருஷ்ண அவதாரமாக நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

கால்நடைகளின் கண்கண்ட தெய்வமாக அருள்மிகு கோபிநாதனை நம்பி வழிபடும் இப்பகுதி மக்கள் தங்கள் கால்நடைகளின் நோய் குணமாகவும், பால்வளம் பெருகவும், இத்திருக்கோயிலில் விற்பனை செய்யப்படும் மண்உரு வாகனங்களை வாங்கி வழிபட்டு நற்பலன் பெற்றுச் செல்வது கண்கூடான காட்சியாகும்.

பக்தர்கள் அருள்மிகு கோபிநாதனுக்கு தங்கள் பசுக்களில் இருந்து பெறப்பட்ட தூய்மையான பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து நலம் பெறுகின்றார்.

சனிக்கிழமைகளில், திண்டுக்கல் பேருந்து நிலையத்திலிருந்து, ரெட்டியார்சத்திரம் அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோவில் அடிவாரம் வரை சிறப்பு பேருந்துகள் பக்தர்களின் வசதிக்காக இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர் நிர்வாகப் பொறுப்பிலுள்ளது.

கால்நடைச் செல்வங்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயிலில் ஆவணி மாதத்தில் கிருஷ்ண ஜெயந்தி உறியடி உற்சவம் மற்றும் புரட்டாசி சனிக்கிழமைகள் மற்றும் தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல் ஆகிய திருவிழாக்கள் மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

மேலும், ரெட்டியார்சத்திரத்திலிருந்து கன்னிவாடி பிரிவின் நுழைவு வாயிலில் மிக உயர்ந்த கம்பீரமான வளைவு பக்தகோடிகளை அருள்முகத்துடன் வரவேற்கிறது. மலையடிவாரத்தில் பக்தர்கள் முடிகாணிக்கை செலுத்தவும், பொங்கலிட்டு வழிபடவும் வசதியான கட்டிடமும், தண்ணீர்வசதியும் அமைந்துள்ளது.

கால்நடைச் செல்வங்களின் நலம், வளம் பெற தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தந்து பிரார்த்தனை செய்து மனநிறைவுடன் செல்கின்றனர்.



## சேலம்

# அருள்மிகு பஞ்சாட்சர கணபதி



மந்திரங்களுக்கு மூலமாயும் மறைநான்கினுக்கு முதன்மையாகவும் திகழும் அருள்மிகு பஞ்சாட்சர கணபதி சிரேதா யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களுக்கும் சிலா வடிவில் சாந்தித்யம் கொண்டு விளங்கி வருகிறார். மேற்படி யுகங்களில் வாழ்ந்த ஞானியர், முனிவர், அரசர், மக்கள், அனைவரும் அவரை வழிபட்டு பேரின்பம் பெற்றுள்ளனர் என்று சுகவன புராணம் கூறுகின்றது. ஔவை பிராட்டிக்கும், வள்ளல் அதியமானுக்கும் மற்றும் பரீட்சித்து மன்னனுக்கும் அருள் வழங்கி பரிபாலித்துள்ளார். அருள்மிகு பஞ்சாட்சர கணபதி ஆதிசேடன், காமதேனு, கற்பக விருட்சம், ஞானாம்பிகை சிவலிங்கம், நந்திகேசுவரர், மூஷிகன், யாளி ஆகிய பரிவாரங்களுடன் எழுந்தருளியுள்ளார்.

திருமணிமுத்தாறு நதிக்கரையில் அமைந்துள்ள இத்திருக்கோயிலில் அமுதமொழி தமிழ் மூதாட்டி ஔவையார் இந்நதியில் நீராடிவிட்டு, "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்" எனத் தொடங்கும் பாடலை மெய்சிலிர்க்க பாடிய வேளையில் சேரமானும், சுந்தரமூர்த்தி நாயனாரும், சிவனை தரிசிக்க கைலாயம் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் யானும் சென்று சிவனை தரிசிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டதால், அருள்மிகு பஞ்சாட்சர கணபதி குழந்தை வடிவில் நேரில் தோன்றி ஔவையே என்று கூப்பிட்டு இறைவன் சுகவனேசுவர் ஆலயத்தில் எழுந்தருளிய வலம்புரி விநாயகர் சன்னதிக்கு வா என செப்பி தன் சுயரூபத்தைக் காட்சி கொடுத்து, ஔவையை சிந்திக்க வைத்து மறைந்தார். ஔவையாரும் அக்கணபதி

அருள்வாக்கின்படி வந்து வணங்கினார், விநாயகர் தன் விஸ்வரூபத்தை எடுத்து தன் துதிக்கையில் ஔவையை சுமந்து சேரமானுக்கும், சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் முன்னதாகவே கைலாயத்தில் சிவபெருமான் முன்பு கொண்டு சேர்த்தார் என்ற பெருமையை இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பஞ்சாட்சர கணபதி பெற்றார் என்று புராணம் கூறுகின்றது.

இத்திருக்கோயில் பழமையான தொன்மைமிக்க திருமணிமுத்தாறு நதி தோன்றிய காலத்திலேயே வரலாற்று சிறப்புமிக்கதாக கருதப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1823-ம் ஆண்டு திரு. டபிள்யூ.டி.டேவிஸ் என்பவர் ஆட்சியராக இருந்தபோது சேலம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் திருப்பணி செய்வித்த திருக்கோயில்களில், இத்திருக்கோயிலும் ஒன்றாகும். இத்திருக்கோயிலின் வரலாறு சேலம், அருள்மிகு சுகவனேசுவர சுவாமி திருக்கோயிலுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக இருந்ததாகவும் தெரிய வருகிறது.

இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி உற்சவம் ஒரு வார காலத்திற்கு மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.



சென்னை மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக்கன்னியம்மன் திருக்கோயிலில் 15/08/2007 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், பங்கேற்றோரும்.


# தஞ்சை கோபுரத்தின் தந்தை கோபுரம்

தஞ்சாவூரின் சிறப்பு அங்கு அமைந்துள்ள பெரிய கோயிலும், அதற்கு பெருமை சேர்க்கும் நிழல் விழாத கோபுரமும் ஆகும். ஆனால், இதனை வடிவமைக்க முன்மாதிரியாக திகழ்ந்த பல்லவர்கால கோயில் ஒன்று தந்தை கோபுரமாகத் திகழ்வதை பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இதுமட்டுமல்ல; அட்டவீராட்டத் தலங்களுள் தலையாய தலம் - சமண மதம் சார்ந்த தருமசேனர் திருநாவுக்கரசர் ஆன தலம் - உழவாரப்பணி தொடங்கிய ஆலயம் - மூவரால் பாடப்பெற்ற நடுநாட்டுத் திருக்கோயில் - பஞ்சமுகலிங்கம் கொண்ட தலம் - திலகவதியார் வாழ்ந்த புனித பூமி - சிற்பக் கலை கொண்ட பிரம்மாண்ட கோபுரம் கொண்ட ஆலயம் என பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட ஆலயமாகத் திகழ்வது பண்ருட்டியை அடுத்துள்ள திருவதிகை வீரட்டேசுவரர் திருக்கோயில் திருத்தலம்.

### அட்ட வீரத்தலம்

வித்துன்மாலி, தாருகாட்சன், கமலாட்சன் என மூன்று அசுரர்கள் பல்வேறு வரங்கள் பெற்று, கோட்டைகள் அமைத்து தேவர்கள், முனிவர்கள் என பலரிடத்திலும் வன்முறையில் ஈடுபட்டு வந்தனர். அனைவரும் இறைவனை வேண்டி நின்றனர்.



அசுரர்களை அழித்தொழிக்க முடிவு செய்த இறைவன் பூமியைத் தட்டாகவும், சூரிய-சந்திரர்களை சக்கரங்களாகவும், வேதங்கள் குதிரைகளாகவும், பிரம்மா தேரோட்டியாகவும், மேருமலையை வில்லாகவும், வாசுகி வில்லின் கழியாகவும், மகாவிஷ்ணு அம்பாகவும் மாறி பூரண தேர் உருவானது.

சிவனின் போரில் நாம் அனைவருமே உதவி செய்யப் போகின்றோம் என்ற கர்வத்தில் இருந்தனர். இதை உணர்ந்த சிவன் அசுரர்களிடம் சென்று ஒரேயொரு புன்னகை மட்டுமே பூத்தார். மூவரின் கோட்டைகளும் அழிந்தன.

### உழவாரப்பணி தொடங்கிய ஆலயம்

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூர் என்ற ஊரில் மாதினியாரின் மகளாக திலகவதியாரும், மகனாக மருள்நீக்கியார் என்ற தருமசேனரும் தோன்றினர்.


அக்காள் சைவத்தில் பற்று கொண்டு வாழ, தம்பி தருமசேனரோ சமணத்தில் ஈடுபட்டு வந்தார். தம்பி சைவ சமயம் சார்ந்து வாழ வரம் வேண்டினாள் திலகவதி.

தாங்காத சூலை நோயால் தருமசேனர் அவதிப்பட, தம்பி தருமசேனரை அதிகை வீரட்டானேஸ்வரனிடம் அழைத்துச் சென்று வயிற்றிலும், நெற்றியிலும் திருநீறு பூசி "கூற்றாயினவாறு விலக்ககலீர்....." என்ற தேவாரப்பதிகம் பாட, தீராத சூலை நோய் தீர்ந்தது; தருமசேனர் அப்பர் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசரானார்.

அப்பர் உழவாரப்பணி துவக்கிய ஆலயமும் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. திருஞானசம்பந்தர், சுந்தரர் என மூவராலும் பாடப்பெற்ற தலமாக திருவதிகை திகழ்கின்றது.

### பாடல் பெற்ற தலம்

திருஞானசம்பந்தர் 11 பாடல்களும், திருநாவுக்கரசர் 146 பாடல்களும், சுந்தரர் 10 பாடல்களும் பாடியுள்ளனர்.



## ஆலய அமைப்பு

கிழக்கு நோக்கிய இராஜகோபுரம் ஏழுநிலைகளில் விண்ணை முட்டி நிற்கின்றது. கோபுர உள்வாயிலில் 108 வகையான நாட்டிய அபிநயங்கள் புடைப்பு சிற்பங்களாக அழகுடன் அமைந்துள்ளன.

இரண்டாவது சுற்றில், ஐந்து நிலை கோபுரமும், அதற்கு முன்பாக விநாயகர், பலிபீடம், கொடிக்கம்பம், நந்தி என ஒருங்கே அமைந்துள்ளன. கோபுரவாயிலின் இடதுபுற சுவரில் கி.பி. 1250ஆம் ஆண்டு கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு காணப்படுகிறது. உள்சுற்று கோபுர வாயிலில் வாயில் முழுக்க கல்வெட்டுக்களால் நிறைந்துள்ளன. இதன் மூலம் பல்வேறு மன்னர்களின் திருப்பணி விவரங்களை எளிதில் அறிய முடிகின்றது.

கொட்டடி மண்டபம், பல்லவர் கால சிவமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசருக்கு தனி சந்நிதி, ஐம்பொன் திருமேனியும் காட்சி தருகின்றன.

## மூலவர் வீரட்டானேஸ்வரன்

கோயிலின் நடுநாயகமாக பதினாறு பட்டைகள் கொண்ட சுயம்புலிங்கமாக வீரட்டானேஸ்வரன் காட்சி தருகின்றார். கருவறை சுவரில், சோமாஸ்கந்தரின் சுதை சிற்பம், சிவனும், பார்வதியும் தாம்பற்றிய மணக்கோலத்தை பார்த்துக் கொண்டே இருக்கலாம். அனைத்துமே பல்லவ படைப்புக்கள்.

பெரியநாயகி அம்மன் சந்நிதி வலதுபுறம் அமைந்துள்ளது. எதிர்ப்புறம் தலவிருட்சமான சரக்கொன்றை மரம் அமைந்துள்ளது.

## தந்தை கோபுரம்

கருவறையின் விமானம் பல்லவர் காலத்தைச் சார்ந்தது. (பல்லவர்கள் சோழர் காலத்திற்கு முன் ஆட்சி செய்தவர்கள் என்பது இங்கே நினைவு கூறத்தக்கது).

இந்த விமானம் தஞ்சை கோபுரத்தின் நிழல்விழாத கோபுரத்தின் 'மாடலாக' இருந்ததை வரலாற்று ஆய்வாளர்கள் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்த அமைப்பினை பின்பற்றியே தஞ்சை பெரிய கோயில் கோபுரம் அமைக்கப்பட்டதை இதன் அமைப்பு நமக்கு உறுதி செய்கின்றது.

எனவே தஞ்சை கோபுரத்தின் தந்தை கோபுரமாக இது திகழ்ந்ததை உறுதி செய்ய முடிகிறது.

## விழாக்கள்

ஆறுகால பூஜை, ஆருத்திரா தரிசனம், தைப்பூசம், சித்திரையில் அப்பர் விழா என விழாக்களுக்கு பஞ்சமில்லை.

## அமைவிடம்

கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி என்பது பிரபலமான நகரம். இங்கிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் திருவதிகை அமைந்துள்ளது. பேருந்து ஆட்டோ வசதியும் உண்டு.

பல்லவர், சோழர் என பல்வேறு மன்னர்களின் திருப்பணியில் உருவான தஞ்சை கோபுரத்தின் தந்தை கோபுரம் கொண்டுள்ள திருவதிகை திருக்கோயில் அடியார்கள் கண்டு மகிழ வேண்டிய ஓர் திருக்கோயில் என்றால் அது மிகையல்ல.

படமும் படைப்பும் - பனையபுரம் அதியமான்.

# பவித்ரோத்ஸவம்

இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம்




108 வைணவத்தலங்களில் முதன்மையான ஸ்ரீரங்கத்தில் உறைகொண்டுள்ள அரங்கனுக்கு 365 நாளும் உத்ஸவம் என்பது சொல் வழக்கு. அவ்வாறு நடைபெறும் விழாக்களில் சிறப்புமிக்கது பவித்ரோத்ஸவம்.

பவித்ரம் என்றால் பரிசுத்தம் என்றும் பூணுல் என்றும் இருவகைப் பொருள் கொள்ளலாம்.

சுத்தம் செய்வது என்றால் என்ன? கோயில்களில் எதிர்பாராதவிதமாக ஏதாவது தவறுகள் ஏற்பட்டால், அவைகளை உடனுக்குடன் சுருக்கமான முறையில் அர்ச்சகர்கள் பிராயச்சித்தம் செய்து விடுவார்கள்.

தீர்க்கதரிசிகளான நம் முன்னோர்கள் கலியுகத்தில் நடக்கப்போகும் அதர்மங்களினால் தடுமாறும் சமயங்களில் எத்தகைய பரிகாரங்களைச் செய்ய வேண்டும் என்று ஆகம சாஸ்திரங்களில் வழிவகுத்து வைத்திருக்கிறார்கள்.

அந்த வகையில் கோயிலைச் சார்ந்தவர்களாலும், கோயிலுக்குச் செல்லும் பக்தர்களாலும் அறிந்தோ அறியாமலோ தவறுகள் ஏற்படலாம் அல்லவா? அத்தகைய தவறுகளுக்கான பிராயச்சித்தங்களை விரிவான முறையில் நடத்தப்படும் உத்ஸவம் தான் இது. இதை ஆவணி மாத சுக்ல பக்ஷ தசமி திதியில் திருமுனை அல்லது அங்குரார்ப்பணம் என்று தொடங்குவார்கள். முதல் திருப்பதியான திருவரங்கத்தில் 9 நாட்களாக கொண்டாடுவார்கள். வைணவத் தலங்களுக்கே உள்ள சிறப்பான இந்த விழா 7,5,3 என்ற நாட்களிலும் நடைபெறும். தலத்திற்கு தலம் வித்யாசம் உண்டு.

ஸ்ரீரங்கத்தில் மறுநாள் காலை ஏகாதசி அன்று உத்ஸவர் மூலஸ்தானத்திலிருந்து கிளம்பி யாகசாலையைச் சென்றடைவார்.

ஹோமங்கள் வளர்த்து திருமஞ்சனம் நடைபெறும். இதைப் பூபரத்திய ஏகாதசி என்பர். பின், விசேஷமான கலர், கலரால் ஆன பட்டு நூலால் நெய்யப்பட்ட பவித்ரங்களை கோயிலில் உள்ள அனைத்து சன்னிதியில் உள்ள மூலவர், உத்ஸவர் மூர்த்திகளுக்கும், சடாரி, மணி, பலிபீடம் போன்றவைகளுக்கும் சாற்றுவார்கள். விசேஷ மந்திரங்களால் பூஜிக்கப்பட்ட அவைகளைச் சாற்றுவதன் மூலம் தோஷங்கள் ஏதாவது ஏற்பட்டிருந்தால் அகற்றப்பட்டுவிடும் என்பது ஐதீகம்.

இந்த உத்ஸவத்தின் 2ம் நாள் மூலவருக்கு பூச்சண்டி சேவை என்று அறிவிக்கப்பட்டிருக்கும். இதை அங்கோபாங்கசேவை என்றும் கூறுவார்கள். அதாவது மூலவரின் திருமேனி முழுவதும் கலர் கலரான பூணல்களை வளையம் வளையமாக சாற்றியிருப்பார்கள். கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் அத்திருக்காட்சியைக் காண கண் கோடி வேண்டும் என்று தெரியாமலா பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அவ்வளவு அதி அற்புதமாக இருக்கும்.

விழாவின் 9ம் நாள் காலையில் நம் பெருமாள் சந்திர புஷ்கரிணியில் தீர்த்தவாரியைக் கண்டருளிவிட்டு, பவித்ரோத்ஸவ மண்டபத்தில் திருமஞ்சனம் கண்டருளுவார். அவரிடமிருந்து களையப்பட்ட பூணல்கள் உரிய பக்தர்களுக்கு வேண்டினால் தரப்படும். இரவு 9 மணிக்கு பெருமாள் மூலஸ்தானத்தை அடைந்தபின் விழா நிறைவுபெறும்.

ஆகம சாஸ்திரங்கள் விதித்த பஞ்ச யக்ஞத்தை ஒவ்வொரு வைணவனும் தினசரி கடைப்பிடிக்கவேண்டும் என்பது விதி, அவையாவன, தேவயக்ஞும், ரிஷியக்ஞும், பித்ருயக்ஞும், நரயக்ஞும், பூதயக்ஞும் எனப்படும்.

தேவவழிபாடு செய்வது தேவயக்ஞுமாகும்,

சாஸ்திரங்களை பயிலுவது, முன்னோர்கள் செய்த நூல்களை ஓதுவது ரிஷி அல்லது ப்ரம்மயக்ஞும் எனப்படும்.

பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்வரை அவர்கள் மனம்கோணாமல் நடந்து கொண்டு அவர்களைப் பராமரிப்பது. அப்படி அவர்கள் உயிருடன் இல்லாவிட்டால் அவர்கள் இறந்த தினத்தில் நீத்தோர் கடன்களைச் செய்வது என்பது பித்ருயக்ஞும் என்பர்.

வசதிகுறைந்தவர்களுக்கும், இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நம்மால் ஆன நிதிஉதவி செய்வதையும் கல்விதானம் செய்வதையும் நரயக்ஞும் என்று கூறுவர்.

கடைசியாக மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் மாடு, ஆடு போன்றவைகளுக்கு புல் கொடுப்பது, நாய் முதலியவைகளை கல்லால் அடித்து துன்புறுத்தாமல் இருப்பது பூதயக்ஞும் என்று சொல்லப்படும் இந்த 5 கருமங்களையும் தவறாமல் கடைப்பிடித்து வாழவேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அவன் அருளால்தான் அவன் தாள் வணங்க முடியும் என்ற கூற்றை மெய்ப்பிக்க நல்ல பரிசுத்தமான எண்ணத்தை நாம் நம் மனத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பவித்ரமான இந்த உத்வத்தைக் கண்டுகளித்து நம்மைப் புனிதமாக ஆக்கவேண்டுமாய் அரங்கனைப் பணிந்து புண்ணியத்தை சேர்த்துக் கொள்வோமாக!

# மனமும் அறிவும்

"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்பது அகத்தியர் வாக்கு. மனிதர்கள் படும் இன்ப துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைவது அவரவர் மனமே ஆகும். மனம் அமைதி பெறுமானால் வாழ்வில் மகிழ்ச்சி தானே வந்து அமையும். கற்றுணர்ந்த சான்றோர்களையும் மனம் அலைக் கழித்திருக்கிறது.

இந்த மனம் பலவற்றைத் தானே கற்பித்துக் கொள்ளுகிறது. இன்பமடைவதாகக் கற்பனையில் நினைத்து நினைத்து இன்பமடைகிறது. துன்பமடைவதாகக் கற்பனையில் நினைத்து அதாவது இப்படி நடந்திருக்குமோ அல்லது அப்படி நடந்திருக்குமோ எனப் பலவாறு நினைத்து நினைத்துத் துன்பம் அடைகிறது. இவ்வாறு கோடிக்கணக்காக எண்ணங்களை எண்ணி, எண்ணி மனம் சலிப்படைகிறது. ஆனால் ஒரு கணப் பொழுதேனும் நான் யார்? என் உண்மை நிலை என்ன என்பது பற்றி எண்ணிப்பார்க்க மனம் முயற்சிப்பதில்லை. இந்நிலையினை,



**"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல"** (337)

எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். இவ்வாறு பயனற்ற எண்ணங்களைக் கற்பனையில் எண்ணி, எண்ணி மனம் புண்பட்டதை,

**"எண்ணாத எண்ணமெலாம் எண்ணி**
**எண்ணி யேழைநெஞ்சம்**
**புண்ணாகச் செய்ததெலாம் போதும் பராபரமே"**

என்கிறார் தாயுமானவர். தத்துவங்கள் பலவற்றைப் பயின்று அதனால் சினம் அடக்கக் கற்றிருந்தாலும் பல்லாண்டுகள் செய்த தவத்தின் பயனாய்ச் சித்திகள் பலவற்றைப் பெற்றிருந்தாலும் மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றலைப் பெறவில்லையானால் மேற்குறிப்பிட்டவற்றைப் பெற்றிருந்தாலும் அதனால் பயனில்லை என்கிறார் தாயுமானவர்.

**"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"**

எனத் தாயுமானவர்போல் நாமும் இறைவனை நம் மனத்தகத்தே எழுந்தருளச் செய்யலாம். அப்பொழுது நம் உள்ளமே பெருங்கோயிலாக மாறிவிடும்.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு**
**ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"**

என்கிறார் திருமூலர்.

இவ்வாறு பக்குவப்பட்டு-பண்பட்ட மனநிலையை 'யோகம்' எனக் கூறுவர். மனிதன் என்பவன் அவன் மனமே தான். மனத்துக்கண் மாசிலன் ஆதலாகிய இம் மாபெரும் அறத்தைச் செய்வதற்குப் பொன் வேண்டியதில்லை. பொருள் வேண்டியதில்லை. உடல் உழைப்போ, இன்ன பிற முயற்சிகளோ வேண்டியதில்லை. எளிமையாகச் செய்யக் கூடிய மனத் தூய்மையாகிய அறத்தை யாரும் செய்ய முயல்வதில்லை. உலகத்தைத் திருத்தப் பலர் முன்வருகின்றனர். ஆனால் தம் உள்ளத்தைத் திருத்திப் பக்குவப்படுத்திக் கொள்ள யாரும் நினைப்பதில்லை. நினைத்தாலே போதும், நினைப்பே மனத்தை விழிப்பு நிலைக்குக் கொண்டு வந்து விடும். பின் மனமே அறிவாகிவிடும். மனம், உள்ளம், நெஞ்சம், நினைவு, எண்ணம் என்று சொல்வதெல்லாம் ஒரு பொருளைத்தான் குறிக்கின்றன. செயல்படும் நிலைநோக்கி ஒவ்வொரு பெயரைப் பெறுகின்றன. ஒரு மனிதனே, தாத்தா, தந்தை, தனையன், மகன், கணவன் எனப் பல நிலைகளிலும் வாழ்வதுபோல, இருக்கும் ஒன்றே பல நிலைகளில் அது செயல்படும் நிலைநோக்கிப் பெயர்பெறுகிறது. மாறிப் பிறக்கும் வழிதெரிந்தவர்க்கு மனமே அறிவாகி நிற்கும். அறிவே தெய்வமென்றார் தாயுமானவர். அந்த அறிவும் அகத்ததுதான் என்பதை,

**"ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோடு ஒப்பக் கொளல்"** (702)

பேராசிரியர் அரங்க இராமலிங்கம்

எனச் சுட்டிக் காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

மனம் தன் நிலை உணர்ந்து தன்னுள் அடங்குமானால் அந்நிலையிலே அம்மனம் அறிவாகி வாலறிவாகச் செயல்படும். நாணயத்தின் இரண்டு பக்கம்போல் மனமும் அறிவும் செயல்படுகின்றன. கீழ்நிலையில் செயல்படும்போது மனமாகவும், மேல்நிலையில் செயல்படும்போது அறிவாகவும் ஒரு பொருளே அணுவாய் அமைந்து அண்டத்தையும் பிண்டத்தையும் ஆள்கின்றது. என் செய்ய இயலும்? அறிந்தவர் அறிவித்தால் அறிந்து கொள்ளலாம். உணர்ந்தவர் உணர்த்தினால் உணர்ந்து கொள்ளலாம். வான் அமிழ்தத்தைப் பருகியவர். எண்ணத்தில் மலர்ந்த வாய்மையைச் செவிமடுத்தவர் பெருநிலை பெற்றவர். இந்நிலை கைவரப் பெற்றவரையே சித்தர் என்றும், ஞானி என்றும் சாகாநிலை கையகப்படுத்தியவர் என்றும், மூச்சோடாத் தவத்திற்குரியவர் என்றும், மாறிப் பிறக்கும்/பிறப்பிக்கும் நிலையைக் கையகப்படுத்தியவர் என்றும் பலவாறாகக் கூறுவர். மனமாகிய எண்ணங்களின் ஆளுமையைக் கடந்திருப்பவரின் நிலையினை,

**"அலையும் மனத்தை அகத்து**
**அடக்கும்**
**அவனே சரியை கடந்தோனாம்**
**அலையும் மனத்தை அகத்து**
**அடக்கும்**
**அவனே கிரியை முடித்தோனாம்**
**அலையும் மனத்தை அகத்து**
**அடக்கும்**
**அவனே யோகதற்பரனாம்**
**அலையும் மனத்தை அகத்து**
**அடக்கும்**
**அவனே ஞானி அதிசூரன்"**

எனச் சான்றோரும் குறிப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மனத்தை அறிவாக மாற்றிக் கொள்ளக் குருபிரானின் அமிழ்த மலையில் திளைத்து எண்ணத்தின் வழி உழைத்தால் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். நினைப்பு நிலையை நிச்சயம் உயர்த்தும். "ஆர்வலர் அறிவார் அரன் தன்னை" என்பார் திருமூலர்.



மனத்தூய்மை

மனத்துக்கண் மாசிலன் ஆதல்;
அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. (குறள் : 34)

ஃஃஃஃ

**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா**
**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால் மந்திரம் செம்மை யாமே**

- அகத்தியர் ஞானம் 2:1

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும் (362)

என அவா அறுத்தல் அதிகாரத்திலும் (37) தெய்வப்புலவர் அழுத்தமாகப் பிறவாநெறியை வலியுறுத்திக் கூறுகிறார். இப்பிறப்பில் எதையேனும் ஒன்றை வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் பிறவாமையைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் தெய்வப்புலவர்.

பிறவாமையைப் பெற வழி என்ன?

ஒரே வழிதான் இருக்கிறது? அது என்ன?

மெய் எனப்படும் இவ் ஊனுடம்பிற்குள்ளே ஒளிர்ந்து (ஜோதி) ஒலியாக (ஓசை) செயல்படும் (விந்து-நாதம்) மெய்ப்பொருளாகிய செம்பொருளைக் கண்ணாரக் கண்டு வழிபடுவதே. இந்த ஒளிநெறிப் பயிற்சியில் ஈடுபட ஈடுபட ஐம்புலனும் ஒடுங்கி இருதய கமலத்துள் இருக்கும் இறைவனோடு ஒன்றிவிடும் நிலை ஏற்படும்.

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை**
**வளர்ந்து எனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்**
**உணர்த்த விட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல்**
**செலுமே**

- சிவஞானபோதம் : (8)

உயிர் சார்ந்ததன் வண்ணமாகிவிடும். அதன்பிறகு ஐம்புல வேடரில் அயர்ந்து போகிற அவலம் ஏற்படாது. அவா அறுபடும். அவா அறுபட்டால் மெய்யுணர்வு தோன்றும். மெய்யுணர்வால் மெய்ப்பொருளை மெய்யின்கண் (உடலில்) காணலாம். அதன்பிறகு,

"இன்பமே எந்நாளும்
துன்பமில்லை"

- திருநாவுக்கரசர்

# பதினோராம் திருமுறையின் பக்திப் பனுவல்கள்

சைவ சமய நூல்கள் சாத்திரம் தோத்திரம் என இரண்டு வகைப்படும். சாத்திரம் பதினான்கு: தோத்திரம் பன்னிரண்டு. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்ற கருத்தின்படித் தோத்திர நூல்களின் சாரமாகச் சாத்திர நூல்கள் அமைந்தன. பொதுவாக உலகியல் வாழ்வில் காணப்படும் அனுபவங்கள் சட்டங்களாக உருவாகி அச்சட்டங்கள் மக்களை ஆளுதல்போலச் சாத்திரப் பனுவல்கள் தோத்திரப் பனுவல்களிலிருந்து பெறப்பட்டவையாய், தோத்திரங்களின் பிரமாணங்களாக உள்ளன.

இறைவனைப் பாடித் துதிக்கவல்ல யாவும் தோத்திரங்களேயானாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உருவான தெய்வப் பனுவல்களைத் தோத்திரம் எனப் பெயரிட்ட அளவில் அவைகள் திருமுறைகள் என்ற தெய்வப் பெயரைப் பெற்றன. முறை என்றால் நூல். திரு என்றால் தெய்வத்தன்மை. தெய்வத் தன்மை மிக்க நூல் திருமுறை எனப்பட்டது.

ஈண்டு தெய்வத்தன்மை என்றது இரண்டு வகைப்படும். ஒன்று தெய்வத்தைப் பற்றியது. மற்றொன்று தெய்வீகமாகவே இருப்பது. அதாவது இறைவன் அடியெடுத்துக் கொடுக்க அடியார்களால் பாடப்படுவது முன்னது. இறைவனே பாடியது பின்னது. இவ்விரண்டுமே எழுத்தும் தெய்வம் என் எழுதுகோலும் தெய்வம் என்ற பாரதியார் கூற்றுப்படி அமைந்த தெய்வத் தன்மையுடையதாம், இந்த அடிப்படையில் தெய்வத்தன்மையமைந்த திருமுறைகள் பன்னிரண்டு.


இப்பன்னிரண்டையும் இருபிரிவாகப் பிரிக்கலாம். ஒருவரால் பாடப்பட்ட தோத்திரம்: பலரால் பாடப்பட்ட தோத்திரம் என்று பிரித்தறியும்போது முதல் ஏழு திருமுறைகளான தேவாரம், எட்டாவதான திருவாசகம், பத்தாவதான திருமந்திரம், பன்னிரண்டாவதான பெரியபுராணம் முதலியவை திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், சேக்கிழார் என்ற தனி அருளாளர்களால் பாடப்பட்டவை. ஒன்பதும் பதினொன்றும் பலரால் பாடப்பட்டவை அவை தொகை நூல்கள்.

ஒன்பதில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ற இருபிரிவும் பதினொன்றில், பாசுரம், மாலை, அந்தாதி, கோவை, உலா, கலம்பகம், ஆற்றுப்படை, பதிகம், தொகை போன்ற பல பிரிவுகளும் உள்ளன. ஒன்பதாம் திருமுறையை ஒன்பதின்மர் பாட, பதினோரம் திருமுறையைப் பன்னிருவர் பாடியுள்ளனர். ஆக பன்னிரு திருமுறையை இருபத்தேழுபேர் பாடியுள்ளனர் எனத் தெரிகிறது.

பொதுவாகத் திருமுறைகள் அனைத்தும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடினாலும் ஒன்பதாம் திருமுறையில் முருகனைப் பற்றிய ஒரு பதிகமும், பதினோராம் திருமுறையில் விநாயகருக்கும் முருகனுக்கும், அடியார்களுக்கும் பாடப்பட்ட பதிகங்களும் உள்ளன. பன்னிரண்டாந் திருமுறை முழுவதும் அடியாரைப் பற்றியதேயாகும். பத்தாம் திருமுறை, தத்துவக் குறிப்புடன் கூடிய சாத்திரத்திற்கும் தோத்திரத்திற்கும் பாலமாக அமைந்த அருள்நூலாக உள்ளது. இந்நிலையில் ஆண்டவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பட்ட நூலாகப் பெரியபுராணம் மட்டுமே அமைய, ஏனைய திருமுறைகள் ஆண்டவனைப் பற்றியதாக அமைந்துள்ளன.

இவற்றுள் ஆண்டவனே பாடிய பாடல் அமைந்த திருமுறையாக உள்ளதுதான் பதினோராம் திருமுறை, குன்றம் எறிந்த குமரவேளும் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் தங்களைப் புலவர் கூட்டத்துள் புலவர்களாகப் பதிவு செய்து கொண்டு தமிழாய்ந்ததால் பெருமையுற்றதாக நக்கீரர், இறையனார் களவியல் என்னும் நூலின் உரையில் குறிப்பிட்டுள்ளார். கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் என இக்காலத் திரைப்பாடலில் கூறும் பாங்கைப் போல அக்காலத்திலேயே இறைவன் அடியாராக மாறுவதில் ஆசை கொண்டதாகத் தெரிகிறது. இந்த வகையில் மதுரை சோமசுந்தரப் பெருமான் தன் பக்தன் பாணபத்திரனுக்குச் சேரமான் பெருமான் மூலம் உதவி செய்ய எழுதிக் கொடுத்த பாடலாக அமைந்த திருமுகப் பாசுரந்தான் பதினோராந் திருமுறையின் தொடக்கமாகும்.

'மதிமலி புரிசை மாடக் கூடல்' எனத் தொடங்கும் அப்பாடல் பக்தனின் வறுமையைப் போக்க எழுதியனுப்பிய பரிந்துரைக் கடிதமாகும். பன்னிரண்டு வரிகளைக் கொண்ட இப்பாடல் கடிதம் எழுதும் முறையைப் புலப்படுத்துகிறது. முதல் நான்கு வரிகள் அனுப்புநர் பற்றிய குறிப்பைத் தருகின்றன. அடுத்த நான்கு வரிகள் பெறுநர் பற்றிய குறிப்பைத் தருகின்றன. இறுதி நான்கு வரிகள் கடிதத்தின் நோக்கம் பற்றிய குறிப்பைத்




தமிழாகரர் **தெ. முருகசாமி**
புதுச்சேரி - 9.



தருகின்றன. பாணபத்திரனாம் பக்தனுக்குப் பொருள் கொடுத்து அனுப்புமாறு சிவபெருமான் எழுதியுள்ளது சிந்தனைக்குரியதாகும். ஏனெனில் சுந்தரருக்கு, ஞானசம்பந்தருக்குத் தாமே பொருள் கொடுத்தவர் பாணபத்திரருக்குக் கொடுக்காமல் சேரமானைக் கொடுக்கச் சொல்லிக் கடிதம் எழுதுவானேன் என்பது சிந்தனைக்குரியது தானே!

இறைவன் நினைத்தால் அவர் எப்படியும் செய்வார் என்பது பொதுப்படையாயினும் ஒரு பக்தனுக்காக தான் எவ்வளவு வேண்டுமானாலும் தாழ்ந்து போகவும் வாய்விட்டுக் கேட்கவும் கூசுவதில்லை என்ற வெளிவந்த தன்மையை உணர்த்திக் காட்டியதோடு, ஓர் அடியாரின் திறத்தை இன்னொருவர்க்கும் உணர்த்திக் காட்டவே இக்கடிதத்தை எழுதியனுப்பினார் சிவபெருமான். எழுதிய கடிதத்தில் பாணபத்திரனின் வறுமை சுட்டப்படாவிட்டாலும் அவனது இசைப் புலமையைச் சுட்டியதன் மூலம் இசையை வளர்க்க வேண்டிய பொறுப்பு நாடாளும் மன்னனுக்கு வேண்டும் என்ற குறிப்பால் சேரமானை மாண்பொருள் கொடுத்தனுப்பக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

**மதிமலி புரிசை மாடக் கூடல்**
**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு**
**அன்னம் பயில்பொழில் ஆல வாயில்**
**மன்னிய சிவன்யான், மொழிதரு மாற்றம்**
**பருவக் கொண்டுப் படியெனப் பாவலர்க்கு**
**ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்**
**செருமா உகைக்கும் சேரலன் காண்க!**
**பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன்! தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.**

எல்லாத்திருமுறைப் பாடல்களும் பெரும்பாலும் தில்லையை மையப்படுத்தியே அமைந்தாலும் இப்பதினோராம் திருமுறையில் முதற்பாசுரம் மதுரையைப் பற்றியதாக அமைந்துள்ளது புதுமையாகும். ஆலவாயில் மன்னிய சிவன் எனத் தன்னை மதுரைக்குரியவனாக இறைவன் அறிமுகப்படுத்திக் கொண்டாலும் "தன்போல் என்பால் அன்பன்" என்ற தொடரால் 'தில்லையில் உன்னை ஆட்கொண்ட நான்தான் மதுரையில் இருக்கின்றேன்' என்று தன் பழமையை நினைவூட்டுவதன் மூலம் எல்லாம் தில்லைமயம் என்பதே திருமுறைகளின் குறிப்பாக உறுதிப்படுகிறது. மேலும் இப்பாடல் இயல் தமிழுக்கு அடையாளமாகிறது. சுட்டிய யாழ் என்ற இசைக் கருவியால் இசைத்தமிழும் சிவன் என்ற குறிப்பால் ஆட்டத்திற்குரிய நாடகத் தமிழும் பெறப்படுவதால் இப்பாசுரம் முத்தமிழ் கலந்த முத்துப் பாசுரம் எனின் மிகையில்லை!

சிவனது திருமுகத்திற்கு அடுத்து, காரைக்காலம்மையாரின் மூன்று நூல்கள் உள்ளன. அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டுப் பதிகம் என்று மூன்றும் போல, சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞான உலா என்ற மூன்றும் காலப்பழமை யுடையதாகும். இவ்வாறே காலப்பழமை கொண்டது ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடிய ஷேத்திர வெண்பா நூலாகும். இவைகளுக்கெல்லாம் முந்தியதாகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. இதைப் பாடியவர் நக்கீரர். நக்கீரர் என்ற பெயர் ஒற்றுமை கருதிப் பின்னாளில் வாழ்ந்த நக்கீரரால் பாடப்பட்ட பலநூல்களும் கல்லாடர், கபிலர், பரணர் என்ற சங்கப் புலவர் பெயர்களைக் கொண்ட பின்னாளைய புலவர்களால் பாடப்பட்ட நூல்களும் காலத்தால் பிந்திய பட்டினத்தார், அதிரா அடிகள், இளம்பெருமான் அடிகள் போன்றோரின் நூல்களும் தொகுத்தவரான நம்பியாண்டார் நம்பி என்பவரின் நூல்களும் சேர்ந்த நிலையில் இப்பதினோராம் திருமுறை மொத்தம் நாற்பது பனுவல்களைக் கொண்டதாகத் தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

- தொடரும்

# வேலும் மயிலும் துணை

## கந்தர் அனுபூதி



சென்ற இதழ் தொடர்ச்சி...

அடுத்த பாடல்:

"முருகன் தனிவேல் முனிநம் குருவென்
றருள் கொண் டறியார் அறியும் தாமோ
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று எனநின் றதுவே!"

ஒப்பற்ற வேலாயுதத்தை கையிலுடைய முருகப்பெருமான். தமிழ் எழுத்துக்களில் மூன்று இனங்களும் உள்ளன. (வல்லினம், மெல்லினம், இடையினம்) முருகு என்ற சொல்லில் மூன்று இனமும் உள்ளன. தமிழின் சிறப்பு இதில் அடங்கி உள்ளது. எல்லாத் திருநாமமும் அடங்கியது 'முருகன்' என்ற நாமம். இறைவனுக்குரிய குணங்கள் எனும் எல்லாப் பொருளையும் தருவது 'முருகன்' என்ற சொல். அழகு, இளமை, செம்மை, செழுமை, தெய்வத்தன்மை அருள் எல்லாமே 'முருகு' தான்.

ஆண்டவன் திருவருள் இல்லாவிட்டால் அவனை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இந்தப் பிறவியில் கிடையாது. திருவள்ளுவர் கூறுகிறார். தவம் செய்ய வேண்டுமானால் அதற்கும் அவன் தவம் செய்திருக்க வேண்டும். அதுபோல முருகப் பெருமானையும் எப்படி அறிந்து கொள்கிறார்கள். அவனருளால்தான் 'உருவன்று' அருவன்று; இருளன்று; ஒளியன்று; அதாவது அது இல்லை, இது இல்லை என்று, பின் ஞானத்தால் அறிந்து கொள்கிறார்கள். இல்லை இல்லை என்று கூறுவது அறிவு. இத்தனையும் இல்லாமல் எது நிற்கின்றதோ அதுதான் அவன். ஒரு பொருள் ஓரிடத்தில்தான் இருக்குமே தவிர இன்னோரிடத்தில் இருக்காது. ஆனால் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் இருக்கிற பொருள்தான் முருகப்பெருமான். இதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உலகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாது. முருகப்ரெருமானின் திருவருள் இருந்தால்தான் தெரிந்து கொள்ள முடியும்.

உருவம் உள்ளதை வைத்து உருவம் இல்லாததை யோசிக்கிறோம். யூகிக்கிறோம். எது வெளிச்சம்? எதுக்குப் பேர் வெளிச்சம். எது இருட்டில் இல்லையோ அது வெளிச்சம். எது இருட்டு? எங்கு வெளிச்சம் இல்லையோ அங்கு இருட்டு. உள்ளது கொண்டு இல்லாதது எது என உணர்கிறோம். முருகப்பெருமான் வந்து என்னிடம் ஒரு உபதேசம் செய்தான். எனக்கும், முருகனுக்கும் மட்டும்தான் அது தெரியும். பழமையில் அறியப்பட்டது அவனன்றி ஓர் அணுவும் அசையாது அது வானன்று காலன்று; அசரீரி அன்று; சரீரி அன்று - இத்தனையுமாய் இருக்கிற பொருள் எதுவோ அதைத்தான் எனக்கு உணர்த்தினான். எல்லாமாயிருக்கிற பொருளைத் தான் சொன்னான் முருகன். கந்தரலங்காரத்தில் ஓர் இடத்தில் அருணகிரிநாதர் சொன்னார். முருகப்பெருமானே என்னை ஏமாற்றி விட்டாயே. என் காதில் ரகசியம் என்று சொன்னாய். எனக்கு மட்டும் தான் தனியாக சொன்ன ரகசியம் என்று நினைத்தேன். ஆனால் உன் ரகசியம் எல்லாம் வள்ளியம் பெருமாட்டியிடம் வெளியிடப்பட்டுள்ளது. குறவர்

டாக்டர் **சரஸ்வதி இராமநாதன்**

சேரியிலும் வெளியிடப்பட்டுள்ளது என்கிறார்.

ஆண்டவனுக்கு ஒரு பெயர் உண்டு. அது நம்பன் என்று பெயர். அதாவது நம்பிக்கைக்கு உரியவன். எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் நம்பிக்கைக்கு உரியவன் ஒருவன் ஆண்டவன்தான். அவனை அறியும் அறிவே அறிவு. அதுவே கல்வி, அதுவே பயன். அழிகிற பொருளை துணையாக வைத்துக் கொண்டால் அது எப்போதும் காக்குமா? அழியாத முருகனை அறிந்து பற்றுவோம்.

"கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று உய்வோம்" மனத்திற்கு ஒரு பெயர் குரங்கு. குரங்கு என்ன பாடுபடுத்துமோ அந்தப் பாடுபடுத்தும் இந்த மனது. தினம் தினம் செய்த காரியங்களை நினைத்துப் பார்த்து படுத்தால் மனதைத் திருத்த வழி கிடைக்கும். முருகப் பெருமானுடைய திருவடிகளை நினைத்துச் செயல்பட்டால் மனது திருந்தும். தேவர்கள் தலையில், மயில்மேல், என் பா அடி ஏட்டில் ஆக மூன்று இடத்தில் முருகன் கால் பட்டது. என்று அருணகிரிநாதர் கூறி உள்ளார். அருணகிரிநாதர் எந்த ஸ்தலத்திற்கு சென்றாரோ அந்த ஸ்தலத்தைப் பற்றி அப்படியே பாடி விடுவார். பல பாட்டுக்கள் கிடைக்கவே இல்லை. ஞானிகள் சொல்வதுதான் தவிரக் கையால் எழுதுவது இல்லை.

என் மனதில் முருகா உன் திருவடி பட்டது. ஏ! மனதே! "முருகப்பெருமானின் திருவடி உன் மீது பட வேண்டும்" மெய், வாய், நாக்கு, செவி, கண் ஆகிய ஐவாயில் வழியாய் செல்லும் அவாவினை ஒழித்தால் முருகப்பெருமானின் திருவடி உன் மனதில் பதியும். கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும். பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம் ஆகும். இந்த ஐந்து ஆசையும் போனால்தான் முருகப்பெருமான் திருவடி தெரியும். முருகப்பெருமானின் திருவடியைப் பற்றினால்தான் இந்த ஐந்து ஆசையும் போகும். முயற்சி பண்ணிக் கொண்டே இருந்தால் ஏதாவது ஒரு ஜென்மத்தில் கண்டிப்பாகக் கிடைக்கும்.

ஐந்து வழியாகச் செல்லும் ஆசையே, ஒழிவாய். கண்ணால் பார்க்கிறது. செவியால் கேட்கிறது. இவையெல்லாவற்றையும் விட ருசி என்ற ஆசையை குறைத்துக் கொண்டு வந்தால் கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டவனிடத்தில் செல்லலாம். ருசிக்காக சாப்பிடுவதால் தான் அதிக செலவு; பசிக்காக சாப்பிட்டால் அதிகச் செலவு ஆகாது. ருசி எங்கிருக்கிறது? நாக்கில் ஒரு விரல்கிடையில் இருக்கிற ருசியை கட்டுப்படுத்தினால் ஆண்டவனை அடையலாம். ருசியையும், ஆசையையும் அடக்க வேண்டும்.

ஆசையை விட்டுவிடு. தாகூர் சொன்னார், 5 பேர் எங்கிருந்தோ வந்தார்கள். என் வீட்டில் தங்குவதற்கு இடம் கேட்டார்கள். இரவில் தங்குவதற்கு நான் இடம் கொடுத்தேன். மறுநாள் பார்த்தால் என் மனத்திருந்த ஆண்டவனைப் பேர்த்தெறிந்தார்கள்." அதாவது இந்த ஐந்து பேர்களை, ஐம்புலன்களை ஜெயித்தால் ஆண்டவனை காணலாம். கைவாய், கதிர்வேல் முருகன் கழல் பெற்று மெய் வாய் விழி நாசியொடும் செவிவாய் ஐவாய் வழி செல்லும் அவாவினை ஒழிக்கலாம். ஒன்றாகிய முருகா, உன்னை நினைக்க, உன் திருவடியைச் சேரவிட மாட்டார்கள் இந்த ஐவர் என்று கூறுகிறார் அருணகிரிநாதர். "ஓர ஒட்டார்; ஒன்றை உன்ன ஒட்டார், ஒண் மலரிட்டு உனதாள் சேர ஒட்டார் ஐவர்" என்று அலங்காரத்திலும் பாடுவார்.

பீமசேனன் உட்கார்ந்து பூஜை செய்யவில்லை. ஒரு சோலையில் போய் நிற்கிறான். அந்த பூக்களைப் பார்த்து அத்தனையும் ஆண்டவனுக்கு என்று பாவிக்கிறான். அத்தனையும் சிவபெருமானுக்கு போகட்டும் என்று நினைக்கிறான். எடுக்க எடுக்க நிர்மால்யம் வந்து கொண்டே இருக்கிறது.


ஆகையினால் நிர்மால்யம் மலை மலையாய்க் குவிந்து கிடக்கிறது என்று கூறினார் வில்லிபுத்தூரார். ஆகப் பொறிபுலன்கள் இறைவனை நோக்கித் திரும்பிவிட்டால் அவன் தாளில் எளிதாகச் சேர்ந்து இன்புறலாம்.

"கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியோடும் செவிவாய்
ஐவாய் செல்லும் அவாவினையே"

- தொடரும்

# கந்தபுராண நுண்பொருள்

நினைவலைகள்



*சென்ற இதழ் தொடர்ச்சி...*

இதைத்தான் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் சனகாதி முனிவர்களுக்கு அருள் புரிந்தார். இந்த ஜீவனும் சிவனும் ஒன்றாக இருந்தது. எது போல? நாழி என்றால் கால்படி; அப்பு என்றால் தண்ணீர். ஒரு கால்படி உப்பை அளந்து கால்படி தண்ணீரில் கலந்து ஒரு எவர்சில்லர் பாத்திரத்தில் கொட்டினால் அரைப் படியாகவா இருக்கும்? கால்படி உப்பு கால்படி அப்பு இரண்டும் அளந்து கொட்டினால் ஒரு கால்படி ஆவது போலே, ஜீவனாயிருக்கின்ற உப்பும், சிவனாயிருக்கின்ற அப்பும் சேர்ந்து ஒன்றாகிவிடுகின்றன.

"நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறு போல்"

என்பது சிவவாக்கியர் பாட்டு. ஆகவே இந்த இரண்டும் ஒன்றுபட்டு ஜீவனும் சிவனும் ஒன்றாகி விடுகின்றன. அப்படி ஆனவர்தான் சதாசிவப் பிரம்மேந்திராள், தியாகப் பிரம்மேந்திராள். பிறகு பிரம்மம் என்று பதம் வந்து விடும். சதாசிவப் பிரம்மம், தியாகப் பிரம்மம், மெய்கண்ட சிவம், அருள்நந்தி சிவம், மறைஞான சிவம், உமாபதி சிவம், ஜீவன் சிவனாகி விடுகிறது. ஆகவே ஒரு கட்டையைக் கொளுத்தினால் கட்டை கனலாக மாறிவிடுகிறது அல்லவா. கட்டைக்குள் தான் கனல் இருக்கிறது. அந்தக் கனல் வெளிப்பட்ட உடன் அந்தக் கட்டையை விழுங்கி அது கனலாக மாறுமாப்போல் உள்ளே இருக்கிற சிவம் வெளிப்பட்டு அந்த ஜீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது. அந்த மகத்தான தத்துவத்தைப் பரமேசுவரன் காட்டினார். இப்பொழுது ஆன்மாக்களாகிற தேவர்களுக்கு மூன்று மலங்கள். சூரபன்மன் ஆணவ மலம். சிங்கமுகன் கன்ம மலம். தாரகாசுரன் மாயா மலம். நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது கந்தபுராணத்தின் நுண்பொருள். நான் கந்தபுராணத்தின் கதையைச் சொல்லவில்லை. நுண்பொருளைச் சொல்லுகின்றேன். சூரபன்மன் ஆணவ மலம். பல தலைகளை உடைய சிங்கமுகாசுரன் கன்ம மலம். தாரகாசுரன் மாயா மலம். தேங்காய்க்கு மேல் பச்சையாய் இருக்கிற மட்டை மாயா மலம். உரித்து உரித்து எடுக்கின்ற நார் கன்ம மலம். சந்நிதானத்திலே உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலம். ஆசார்யன் தான் உடைக்கின்றார். அது ஆணவ மலம். ஆணவம் சட்டென்று போகாது. சில தாய்மார்கள் சொல்வார்கள்: "ஆணவம் பிடித்து அலைகிறான்" என்றும், "அவன் கன்மத்தை அவன் தானே தொலைக்கணும்" என்றும், "மாயையிலே மூழ்கி இருக்கிறான்" என்றும் பேசுவது வழக்கத்தில் உள்ளது. ஆணவ மலம் சூரபன்மன். கன்ம மலம் சிங்கமுகாசுரன். தாரகாசுரன் மாயா மலம். இந்த மூன்று மலத்தை எதனால் அழிக்கவேண்டும்?

ஞானத்தாலே. ஞானம்தான் வேல். அறிவு என்றாலும், வேல் என்றாலும், ஞானம் என்றாலும் ஒன்று. இருபத்தைந்து நயாபைசா என்றாலும். கால் ரூபாய் என்றாலும், காலணா என்றாலும் ஒன்று. அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. ஒன்று அறிவு ஆழமாக இருக்க வேண்டும். அறிவு எதையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். குழந்தைகள் மேலே அம்மாவுக்குத் தான் மிகவும் பிரியம். ஏனென்றால் முந்நூறு நாள் சுமந்து பெற்றவள். அப்பாவுக்குப் பிரியம் அதிகம். இராமச்சந்திர மூர்த்தி கானகம் போனார். அப்பாவாகிய தசரதர் மாண்டாரா? அம்மாவாகிய கௌசல்யை மாண்டாளா? சக்கரவர்த்தி மாண்டார். அப்பாவை விட அம்மாவுக்குத் தான் பிரியம் அதிகம் என்று முந்தி தீர்மானம் பண்ணினோம். ஏன் அப்பா இறந்தார்? அம்மா சாகவில்லை? இராமன் பேரிலே அன்பு வைத்தாள் கௌசல்யை; ஆசை வைத்தான் தசரதன். ஆசை மனிதனை அழிக்கும். அன்பு மனிதனை வாழ வைக்கும். இதிலிருந்து நம் குழந்தைகள் மேலே அன்பு வைக்கலாம். ஆசை வைக்கக் கூடாது. இதை ஆழமாக சிந்திக்கிறவர்களுக்குத் தெரியும். அறிவு ஆழமாக இருக்க வேண்டும் பிறகு விசாலமாக இருக்க வேண்டும். அப்படி அறிவு பரந்து இருக்க வேண்டும். பிறகு கூர்மையாக இருக்க வேண்டும். வேலாயுதத்தைக் கவனியுங்கள் அடிப்பகுதி ஆழமாக இருக்கிறது. நடுப்பகுதி விசாலமாக இருக்கிறது. நுனிப் பகுதி கூர்மையாக இருக்கிறது. வேல் என்றால் ஞானம். எல்லாவற்றையும் ஞானம் தான் வெல்லும். முதலில் மாயா மலமாயிருக்கின்ற அந்தத் தாரகனை வென்றார். பிறகு ஞானத்தினாலே கன்ம மலமாயிருக்கின்ற சிங்கமுகாசுரனை வென்றார். ஆணவ மலம்தான் கடைசி வரைக்கும் இருக்கும். அதைச் சட்டென்று வெல்ல முடியாது. அது கடைசி மலம். சூரபன்மன் பல்வேறு வடிவங்கள் எடுத்தான். அந்த ஞானத்தாலே அத்தனை வடிவங்களையும் எம்பெருமான் அழித்து அருளினார்.

கடைசியில் அவன் ஆயிரம் கோடி அமாவாசையாக ஆனான். இருட்டு-ஆணவ இருள். ஆணவத்தின் தன்மை இருளாக இருக்கும். இந்தப் பூலோக இருள் எந்தப் பொருளையும் காட்டாது. தன்னையும் காட்டாது. சில பேர் திருடிவிட்டு அவனும் நம் கூட இருப்பது போலே. அதுபோல் ஆணவ மலம். ஆயிரம் கோடி அமாவாசையாக வடிவெடுத்தான். அந்த இருள் மேலே ஒளியை விட்டார். ஒரு திருப்புகழ்.

"அரியும் அயனோடு அபயம் எனவே
அயலை இருள்மேல் விடுவோனே"

அயில் என்றால் வேல். இருள்மேல் விடுவோனே! அந்த ஆணவ மலமான இருள்மேலே ஞானத்தை விடுவது. அது எப்படி இருக்கும்? நான் எப்படிச் சொல்வேன் உங்களுக்கு. இப்பொழுது எனக்குத் தெரிந்தது சூரிய பகவான். இந்தச் சூரியனைத் தான் சொல்ல முடியும். 'பலர் புகழ் ஞாயிறு' என்றார் நக்கீரர். அருணகிரியார் அப்படிச் சொல்வாரா?

**"உததியிடை கடவுமர கதவருண குலதுரக**
**வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்**
**உதயமென"**


நக்கீரர் ஒரு சூரியன் என்றார். அருணகிரியார் சதகோடி சூரியர்கள் என்றார். மிகுந்த ஒளியாம். அதிசூரியப் பிரகாசம். நூறுகோடி சூரியனுடைய மின்சாரத்தைச் சேர்த்து, அதை டாடா கம்பெனியிலே கொடுத்து அதையெல்லாம் பொடி பண்ணி அதைப் பெரிய மூசையிலே வைத்து உருக்கி, (எதை? ஆதித்தனை) தேன் மெழுக்கில் வேல் போல தட்டி, அந்த நூறு கோடி சூரியர்களை உருக்கி வார்த்தால் - அதைப் பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்குமாம் வேலாயுதம். சிந்தைக்கு எட்டாதது. அதை அருணகிரியார் சொன்னார். அம்பாள் ஞானமய வடிவு. எப்பவுமே பெண்களுக்கு அறிவு அதிகம். ஏனென்றால் அவர்கள் நிழலில் இருக்கிறார்கள். நிழலில் இருப்பதனால் உயர்வாக இருப்பார்கள். நாம் வெய்யிலில் அலைகிறோம். எந்தப் பொருளும் வெளியிலில் இருந்தால் கொஞ்சம் மெருகு குறைந்திருக்கும். அதனால்தான் அருணகிரியார் அம்பாளிடம் ஆரம்பிக்கிறார். வேலைப் பற்றிச் சொல்வதற்கு.

- தொடரும்

நாமகிரி என்னும் புராணப் புகழ்பெற்ற புண்ணிய திருத்தலம் தமிழ்நாட்டில் நாமக்கல் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

அஹோபில க்ஷேத்திரத்தில் ஹிரண்யனை சம்ஹாரம் செய்த நரசிம்ம அவதாரத்தில் உக்ர சொரூபமான நரசிம்மரை தரிசனம் செய்ய வேண்டுமென ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவர்களுடன் பகவானைக் காண வருகையில் அங்கு சிறுபாலகனாகிய பிரகலாதனின் பக்தியால் தனது சினத்தை தவிர்த்து பிரகலாதனை அரவணைத்திருக்கும் காட்சியைக் காண்கிறாள்.

உக்ர சொரூபத்தைக் காண முடியாத மஹாலக்ஷ்மி தனக்கு அந்த உக்ர சொரூபக் காட்சி தந்து அருள்புரிய வேண்டுமாய் பிரார்த்திக்கிறாள். அதற்கு பகவான் ராமாயண கால இடைப்பகுதியில் நீ விரும்பியபடி காட்சி தந்து அருள்புரிவேன் என்று ஆசிர்வதிக்கிறார். அதன்படி மஹாலக்ஷ்மி இந்த க்ஷேத்திரத்தில் கமலாலயம் என்னும் தடாகத்தில் எம்பெருமானை நினைத்து தவம் இருக்கிறாள். திரேதாயுகத்தில் ராம ராவண யுத்தத்தில் மூர்ச்சையான லக்ஷ்மணனின் மூர்ச்சை தெளிய வைக்க சஞ்சீவி பர்வதத்தை எடுத்து வந்த அனுமன் பின் அதை எடுத்த இடத்தில் வைத்து விட்டு திரும்புகையில் கண்டகி நதியில் நீராடுகிறார். அதில் அவருக்கு எம்பெருமான் திருவுருவாகிய சாளக்ரமம் கிடைக்கப்பெற்றார். அனுமன் மிகவும் அகமகிழ்ந்து ஆனந்தமடைந்து தனக்குக் கிடைத்த சாளக்ரமத்தை எடுத்துக் கொண்டு வருகிறார். வழியில் ஸ்நான அனுஷ்டானத்திற்காக கீழே பார்க்கிறார். கமலாலய தடாகத்தில் தாயார் மஹாலக்ஷ்மி தவம் புரிவதைக் கண்டு மகிழ்ந்து கீழிறங்கி தாயாரைத் தரிசித்து தான் வைத்துள்ள சாளக்ரம மூர்த்தியை அவரிடம் கொடுத்து கீழே வைத்துவிடாமல் தங்களின் திருக்கரத்திலேயே வைத்திருக்கும்படி தாயாரிடம் கூறி அனுஷ்டானத்திற்கு செல்கிறார். அதுசமயம் தாயாரின் கைகளில் இருந்த திருமூர்த்தம் பாரம் அதிகமாகி கீழே வைக்கும்படியாயிற்று. சிறிய திருவடியாகிய அனுமன் சாயம் சந்தியும், ஸ்ரீராம ஜெபமும் முடித்து திரும்ப தாயார் அனுமனிடம் நீ கொடுத்த சாளக்ரமத்தின் பாரம் தாங்காமல் கீழே வைத்துவிட்டேன். அது உடனே மலையாக, பர்வதமாக மாறிவிட்டது என்றார். நீ சஞ்சீவி மலையையே எழுந்தருளச்



நாளும் நலம் தரும்

# நாமக்கல் நரசிம்மர்

செய்த பராக்ரமசாலி ஆதலால் இந்த மலையை நீயே எடுத்துக்கொள் என்று மஹாலக்ஷ்மி கூறுகிறாள். தாயாரின் வாக்கிற்கிணங்கி ஆஞ்சநேய ஸ்வாமி தன் வாலால் மலையை பெயற்க முற்படுகையில் அந்த சாளக்ரம மலையிலிருந்து மிகுந்த பேரொளியுடன் மிக உக்ர சொரூபமாய் பகவான் நரசிம்மர் காட்சியளித்தார். ஆஞ்சநேய ஸ்வாமி திகைத்து இனம்புரியாமல் கைதொழுது நிற்க நரசிம்மர் அவரை ஆசிர்வதித்து. நீ கொண்டுவந்த சாளக்ரமத்தில் தாயார் விரும்பியபடி காட்சி தந்தேன். லக்ஷ்மிதேவி எனது நாமத்தையே உச்சரித்து தவம் செய்த பெருமையால் நீ கொண்டு வந்த சாளக்ரமம் கிரியாக மாறிவிட்டது என்றார். ஸ்ரீநரசிம்மர் மஹாலக்ஷ்மியை ஆசிர்வதித்து இத்தலத்தில் என்னை தவம் செய்து என்னை தரிசித்தால் பக்தர்கள் உன்னையே முதலில் தரிசனம் செய்து பின் என்னை தரிசிக்க வேண்டும் என்று அருளினார். தாயாரின் நாம ஸ்மரனையினால் ஏற்பட்ட கிரி, நாமகிரி என்று இத்தலம் விளங்கும் என ஆசிர்வதித்தார்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நாமகிரி மஹாலக்ஷ்மி என்றும் நரசிம்ம அவதாரத்தில் காட்சியளித்ததால் எம்பெருமான் நரசிம்மராகவும் சேவை சாதிக்கிறார்கள். பகவான் அனுமனிடத்தில் கலியுகத்தில் என்னையும் தாயாரையும் தரிசித்து உன்னையும் பிரார்த்தித்தால் பக்தர்களின் கோரிக்கைகளை அனுகூலமடையச் செய்வாய் என்று ஆசிர்வதித்தார். எனவே மிக்க மகிழ்வுடன் அனுமன் விஸ்வரூப தரிசனத்துடன் பகவான் நரசிம்மரை பாத தரிசனம் செய்து கொண்டும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றியும் வைக்கிறார்.

இத்திருத்தலத்தில் மூன்று சக்தி சொரூபங்களை தரிசனம் செய்யலாம்.




**இச்சாசக்தி : நாமகிரி தாயார்**

நாம் விரும்பும் சகல நன்மைகளையும் அருள்புரியும் நாமகிரி தாயார், வேண்டிய வரங்களை வேண்டியபடி அளிக்கக்கூடிய வரப்பிரசாதி. அன்றாட வாழ்வில் நமக்கு வேண்டியதை நமது தாயாரிடத்தில் வேண்டிக் கொள்வதைப்போல் இங்கு ஸ்ரீநாமகிரி தாயாரின் சன்னதியில் ஒருமுகமாக அவளை நினைத்து பிரார்த்தனை செய்பவர்களுக்கு தாயாய் தயைபுரிந்து, அவர்களின் இச்சைகளை பூர்த்தி செய்துவரும் இச்சாசக்தியாய் விளங்குகிறாள். “இச்சாசக்தியா மஹாலக்ஷ்மி திரிகுணா பரமேஸ்வரி” என்று சொல்லும் தேவியாகவும் இத்தலத்து தாயாரைப் போற்றுகிறது. நாம் இக்காலத்திலேயே நமக்குத் தெரியும்படி கணித மேதை இராமானுஜத்தின் கனவில் தோன்றி குழப்பமான கணக்குகளை சொல்லிக் கொடுத்து கணித மேதையாக்கினாள். இது அவரது வாழ்க்கைக் குறிப்பும், “தி மென்ஸ் நியூ” என்ற வெளிநாட்டவரது கணக்குப் புத்தகமும் எடுத்துரைக்கிறது. ஸ்ரீமத்வ சம்பிரதாயமான மனுபாகல் கர்நாடக வியாசராஜ மடத்திற்கு ஸ்ரீநாமகிரி தாயாரும் நரசிம்மரும் குல தெய்வமாக திகழ்கிறார்கள். மற்றும் மூதறிஞர் ராஜாஜிக்கும் தாயாரே குல தெய்வம் எனவே அவர் மகளுக்கு நாமகிரி என்று பெயர் வைத்துள்ளார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளைக்கும் அன்னையே குலதெய்வம். கடவுள் உருவங்களையே வரைந்து மிகப்புகழ் பெற்ற ஓவியர் சில்பி நரசிம்ம ஸ்வாமி சன்னதிக்கும், ஆஞ்சநேயர் சன்னதிக்கும் நடுவில் ஒரு வீட்டில் வளர்ந்தவர். அவர் தாயாரையும், நரசிம்மரையும் மற்றும் ஆஞ்சநேய ஸ்வாமியையும் ஓவியமாய் எழுதியதையே நாம் நம் வாசகர்களுக்கு வழங்குகிறோம். இவர்களையும் இன்னும்

பலரையும் புகழ் பெறச் செய்து தாயாருக்கு வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அர்ச்சனை, அபிஷேகம் செய்தல், புடவை, திருமாங்கல்யம் சாத்துதல், நெய்தீபம் ஏற்றுதல், வில்வம், தாமரைப்பூ கொண்டு அர்ச்சித்தல் என்று கைங்கர்யம் செய்வோர்க்கு கோரிக்கைகளை உடனே நிறைவேற்றி விடுகிறாள் தாயார். இவ்வளவு அருள் செயல்களை அன்னை செய்வதால் இச்சாசக்தி சொரூபம் என்கிறோம்.

**ஞானசக்தி : பகவான் ஸ்ரீநரசிம்மர்**

பிரகலாதன், பராசரர், நாரதர், சங்கரர், ராகவேந்திரர் போன்ற மகான்கள் ஞானசக்தி அடைந்ததே ஸ்ரீ நரசிம்மரின் அருளால்தான். திருமங்கை ஆழ்வாருக்கு பல இடங்களில் அருளிச் செய்தார். ஸ்ரீவைஷ்ணவ ஜோதிட சாஸ்திரத்தில் ஞானகாரகன் கேதுவிற்கு அதிதேவதை ஸ்ரீநரசிம்மரே. பில்லி, சூனியம், ஏவல் போன்ற மனிதர்களின் மறைமுக சத்ரு உபாதைகளையும் நேர்முக எதிரிகளால் தொல்லைகளையும் நீக்க சக்கரத்தாழ்வார் பின்னிருந்து கொண்டு அவரை இயங்கச் செய்வதும் ஸ்ரீ நரசிம்மரே. மரணபயம் நீக்க வல்லவர் என்ற ஈஸ்வரனாலேயே செய்யப்பட்ட ஸ்ரீநரசிம்ம தாபினி உபநிஷத் என்னும் வேதத்தின் சாரத்தில் ஸ்லோகத்தை ஒவ்வொரு பதத்திற்கும் ஒரு ஸ்லோகம் வீதம் குறிக்கப்பட்டு அதற்கு "மந்த்ர ராஜபத ஸ்தோத்திரம்" என்று ஈஸ்வரனால் பெயர்சூட்டி அருளப்பட்டது. இதைத்துதித்து மரணபயம் நீங்கி இன்பமாய் வாழலாம். வைகாசி மாதம் சுக்ல, சதுர்தசி, சுவாதி நட்சத்திரமும் பிரதோஷமும் கூடிய வேளையில் எம்பெருமான் ஸ்ரீநரசிம்மராக அவதரித்ததால் ஸ்வாமிக்கு பிரதோஷ பூஜையும் சிறப்பாக நடைபெறுகிறது. ஞானத்தின் அதிபதியான, ஞான சொரூபமான



ஸ்ரீஹயக்ரீவர் என்ற பரிமுகப்பெருமான் ஸ்ரீநரசிம்மரைப் பூஜித்தே ஞானத்தை அடைந்தார். அப்படிப்பட்ட ஞானசக்தி சொரூபம் நரசிம்மர். ஹயக்ரீவ அவதார நோக்கிற்காக ஜ்ருஷ்ம அவதாரத்தை தனக்குள் தியானித்து ஹயக்ரீவர் தோன்றினார்.

**கிரியாசக்தி : ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி**

சகல காரியங்களையும் வெற்றியடைச் செய்து நம்மை மகிழ்விப்பவர். "முடிக்க முடியாத காரியங்களை முடித்து வைப்பவர்" என்ற பராக்கிரமசாலி. சூரியனையே பழம் என்று பிடித்தவர். கதிரவனை நாங்கள்தான் பிடிப்போம் நீ பிடித்தது முறையல்ல என்ற ராகு, கேதுவை வீழ்த்தி ஜெயம் கொண்டவர். ராகு, கேதுவும் வேண்டியபடி தேவேந்திரனை யுத்தம் செய்கையில் இந்திரனின் வஜ்ராயுதம் ஸ்ரீமாருதியின் தாடைகளில் பட்டு வீங்கிவிட்டது. ஹனு என்றால் தாடை, மான் என்றால் பெரியது என்று அர்த்தம். எனவே அவரை ஹனுமான் என்று வணங்குகிறோம். சகல வித்தைகளுக்கும் அதிபதி சூரிய பகவான் ஆவார். அவர் தம்மைப் பிடித்து ஹனுமனுக்கு சகல வித்தைகளும் கற்று அருளினார். அதனால் இந்திரனும் தோற்கும்படியாயிற்று. ராகு, கேதுவும் தாங்கள் தோல்வியடைந்த காரணத்தால் தங்களுக்கு ஏற்பட்ட தானியங்களை ஹனுமனுக்கு ப்ரீதியாக அளிக்கின்றனர். அதனால் எங்கள் சரீரம்போல் (பாம்பு) உளுந்தால் வடைமாலை செய்து சாத்துபவர்களுக்கு எங்களால் ஏற்படும் உபாதைகள் குறையும் என்று ராகு கேது விண்ணப்பித்தனர். எனவே ஸ்வாமிக்கு பக்தர்கள் தினமும் வடமாலை சாத்துகின்றனர்.

மிகசக்தி வாய்ந்த விஸ்வரூபி ஆஞ்சநேயருக்கு வருடாவருடம் மார்கழி மாதம்

அமாவாசையன்று ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் வெண்ணெய்க்காப்பு, சந்தனக்காப்பு மற்றும் புஷ்ப அலங்காரம் முதலியவை அடிக்கடி பக்தர்களால் நடத்தப்படுகிறது. இப்படிப்பட்ட மஹாபராக்கிரமசாலியான ஸ்ரீஆஞ்சநேயர் கிரியா சக்தி சொரூபமாக விளங்குகிறார்.



**இக்கோவிலைப்பற்றி :**

நாமகிரி தாயார் கோவில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது. நரசிம்மர் மேற்குப்பார்த்தபடி கோவில் கொண்டுள்ளார். இத்தலத்து ஸ்ரீநரசிம்மர் பிரம்மா-விஷ்ணு-சிவமும்மூர்த்தியும் தன்னகத்தே கொண்டுள்ளார். மத்தியில் ஸ்ரீநரசிம்மரும், வடபகுதியில் ஈஸ்வரனும், தென்பகுதியில் படைப்புக் கடவுளான பிரம்மாவும் ஒரே மூலஸ்தானத்தில் இருப்பதால் இக்கோவில் மும்மூர்த்தி ஸ்தலம் என்று விளங்குகிறது. பிரம்மாவின் குமாரர்களாகிய சனகர், சனாதனர் ஆகிய இருவரும் உலக நடப்புகளை இறைவன் செவியருகே நின்று சொல்லியவண்ணம் சேவை சாதிக்கிறார்கள். ஒருபுறம் சூரியனும் மறுபுறம் சந்திரனும் பெருமாளுக்கு வெண்சாமரம் வீசுகிறார்கள். இப்படி தரிசிக்கையில் நமக்கு ஜாதக ரீதியான சூரிய, சந்திர தோஷங்களும் நிவர்த்தியடைகின்றது. அர்த்த மண்டபத்தில் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கி வைகுண்ட நாதரும் மேற்கு ஹிரண்ய சம்ஹார மூர்த்தியும், தென்பகுதியில் வடக்கு நோக்கி ஸ்ரீபூவராக ஸ்வாமியும் எழுந்தருளியுள்ளனர். நரசிம்ம ஸ்வாமி சன்னதிக்கு எதிரில் சுமார் 250 அடி தொலைவில் 18 அடி உயர ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி தொழுத கரங்களோடு விஸ்வரூபியாய் சேவை சாதிக்கிறார். நான் பூஜிக்கும் சாளக்ரமமே மழை வெயிலால் தாங்குகிறது. ஆதலால் எனக்கு விமானம் (கோபுரம்) வேண்டாம் என்று அருள்பாலிக்கிறார்

இக்குடவரைக் கோவிலை தகடூரை ஆண்ட அதியமான் என்னும் அரசனின் பேரன் குலசேகரவர்மன் என்ற ராஜா கட்டினார். இக்கோவிலிலுள்ள சிற்பங்கள் யாவும் பல்லவ பேரரசின் பாணியில் உள்ளது. இதற்குண்டான கல்வெட்டுக்களும் உள்ளன. இம்மலையின் கிழக்குப்பகுதியில் கிழக்குப் பார்த்து ஸ்ரீரங்கநாதருக்கு கோவில் அமைந்துள்ளது. இதுவும் குடவரைக்கோவிலே. இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்திற்குட்பட்ட இத்திருக்கோவிலில் ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி நித்ய பூஜைகள், உற்சவங்கள் நடைபெறுகிறது. வருடாவருடம் பங்குனி மாத ஹஸ்த நட்சத்திரத்தில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி, ஸ்ரீரங்கநாதர், ஸ்ரீஆஞ்நேயர் ஆகிய மூவருக்கும் தனித்தனி தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

நாமும் நாமகிரி செல்வோமே நரசிம்மரை வழிபட்டு நலம் பல பெறுவோமே!

- படங்களும் படைப்பும்
கே.எஸ். இளங்கோவன், நாமக்கல்


| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் இந்து சமய அறநிலையத் துறை, சென்னை-600 034. தொலைபேசி எண் : 28334811 / 12 / 13 |
| ஆசிரியர் (கூ.பொ) | : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி, பி.எல்., துணை ஆணையர் |
| அச்சிடுவோர் | : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை-86. தொலைபேசி : 23450920 / 28117575 |



30-08-07 அன்று நடைபெற்ற சென்னை, வடபழநி ஆண்டவர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்கள், தலைமையிட இணை ஆணையர் திரு. எஸ். ஜெயராமன் அவர்கள், சென்னை மண்டல இணை ஆணையர் திரு.ப. தனபால் அவர்கள், அறங்காவலர்கள், ஆன்றோர்களும், சான்றோர்களும், ஆன்மிகப் பெருமக்களும், யாகசாலை நிகழ்ச்சியில் திருமுறை ஓதும் ஓதுவா மூர்த்திகளும்.










பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08

LAKSHMI VILAS BANK

# THE LAKSHMI VILAS BANK LTD.,

Administrative Office,
Salem Road, Kathaparai, Karur - 639 006.
Phone : 04324 220051 to 220060

We offer Highest Rate
of Interest for your Deposits
at

10.75%* PA
(For Senior Citizen)

Please contact the Branch Manager
in your
Town for further Details

Toll Free No. 1800 425 2233

Website : www.lvbank.com